J
W·2·n M90
M90
97000

# JANAVINODINI

4.
APRIL, 1890.
MADRAS.



# ஜனவிநோதினி.

J
W. 2 m M90
M90.
97000

ஜ

# JANAVINODINI.

# ஜநவிநோதிநி.

இல. 4.] ஏப்ரல்மீ 1890. [புஸ்த. XXI.

CONTENTS. / அட்டவணை.

| CONTENTS. | | அட்டவணை. | |
|---|---|---|---|
| Patriotism | 73 | தேசாபிமானம் | 73 |
| Queer taxes | 81 | விந்தையான வரிகள் | 81 |
| Right goes to the right.—A Story | 85 | அவரவருரிமை அவரவரடைவர்.—ஒரு கதை | 85 |
| The Life of a Bear, Chapter XIX (*Continued*) | 91 | ஓர் கரடியின் கதை, 19-ம் அத்தியாயம் (தொடர்ச்சி) | 91 |
| The characteristics of an Epic | 94 | காவியலட்சணம் | 94 |
| News and Notes | 96 | வர்த்தமானக் குறிப்புகள் | 96 |

MADRAS.
Published by the
MADRAS SCHOOL BOOK AND VERNACULAR LITERATURE SOCIETY,
OLD COLLEGE, NUNGUMBAKAM.

# ஜநவிநோதிநி.

இல. 4.] ஏப்ரல்மீ 1890. [புஸ்த. XXI.


## தேசாபிமானம்.

ஒவ்வொருவரும் தாம் பிறந்ததேசத்திலே அபிமானங்கொண்டிருப்பது மானுட இயல்பாயிருக்கின்றது. நாம்பிறந்ததேசம் நீர்வளம் - நிலவளம் - குடிவளம் முதலியவற்றில் எவ்வளவு சீர்குன்றியதாயிருக்கினும், நாம் சில நாள்கழிந்தபின் நூதனமாய்க்குடியேறி நெடுங்காலம் வரையிலே ஜீவித்துவந்ததேசம் எல்லாவளங்களிலும் சிறப்புற்றோங்கியிருக்கினும், நாம் ஆதியில் பிறந்ததேசத்தின் விஷயமாகவே நம்மை அறியாத ஓர்வகை அபிமானம் நம்மிடத்திருப்பதை நாம் அநுபவவாயிலாகக்காணலாம். நாம்பிறந்து சிறிதுகாலம்வளர்ந்த தேசத்தைவிட்டுத் திரவியம்சம்பாதிப்பது முதலிய கருமங்களை நாடித் தூரதேசங்களுக்குச்சென்று அவ்விடத்தில் நாம்பிறந்த தேசத்திலிருந்ததைக் காட்டினும் கோடிமடங்கு அதிக செல்வந்தராய் மாடமாளிகை கூடகோபுரங்களைக் கட்டிக்கொண்டும் திவ்வியமானவாகனாதிகளை அமைந்துக்கொண்டும், ஒன்றுங்குறைவிராதபடி நாம்வாழ்ந்துவரினும், இவ்வளவு சம்பத்துடன் இந்த அந்நியதேசத்தில் நாமிருப்பதனாற்பயனென்னை? நம்மை இவ்விடத்திற்கண்டு வியப்பவர்யாவர்? என்பதுபோன்ற தோற்றங்கள் மனதிலுதித்து நம்முடைய ஜனனதேசத்திற்கே திரும்பிவரத்தலைப்படுகின்றோம். உலகத்தில் எவ்விடத்திலிருந்தால்தான் என்னை? எங்கேயிருந்தாலும் சுகமாய்வாழ்ந்திருக்கவேண்டியதொன்றுதானே நாம் விரும்பற்பாலது? என்று மனத்திருப்தியடையாமல், ஜனனபூமியை அபிமானித்தல் மானுடமனோதத்துவலட்சணமாயிருக்கிறது. அந்நிய தேசத்தில் நெடுங்காலமிருந்து நம்முடைய ஊரைநோக்கிவருகையில் சிறிதுதூரத்திலேயே நம்தேசத்திலுள்ள கோபுரங்களின் சிகரங்களும் விளக்குக்கூடுகளும் மற்றும் உயர்ந்த கட்டடங்களின் மேற்பாகங்களும் நம்முடைய கட்புலனுக்குத்தோன்றியமாத்திரத்தில் நம்மை அறியாத ஒருவித குதூகலமும் மயிர்ச்சிலிர்ப்பும் நம்மிடத்துண்டாவதை நாம் அநுபவவாயிலாகக் காணலாம். ஜனனபூமியின் ஆசையினாலே மேற்கண்ட அபிமானச்சின்னங்கள் உண்டாகி "இது என்தேசம், இது நான்பிறந்த ஊர்." என்று மனக்கசிவுடன் தனக்குள்ளே சொல்லிக்கொள்ளாதகன்னெ

ஞ்சமுடைய மானுடனும் இவ்வுலகத்தில் உயிரோடிருக்கின்றானா? என்று ஸிர் வால்ட்டர் ஸ்காட் என்னும் கவிவாணர் தம்முடைய சிறந்தகவி ஒன்றில் கூறியிருக்கின்றார்.

இப்படிப்பட்ட தேசாபிமானம் இல்லாதவர்களைக் கேவலம் ஜடப்பொருள்களென்றே கூறவேண்டும். மிருகங்களுக்கும் பறவைகளுக்குங்கூடத் தாம் அடிநாளையிற் பழகிய இடத்தைப்பற்றிய அபிமானம் சிலசமயங்களிலே கரைபுரண்டு மேலெழுகின்றது. இப்படிப்பட்ட அபிமானத்திற்குக்காரணம் எதுவாயிருக்கலாமென்று விசாரிக்கப் புகுமளவில், பாலியத்தில் மனம் சஞ்சலமற்று நின்மலமாயிருந்தபோது எங்கெங்கவிடத்தில் எங்கெந்தப்படி பழகினோமோ அந்தந்த விஷயங்களிலேயெல்லாம்அபிமானம் பசுமரத்தாணிபோல் வேரூன்றி வயதுமுதிர்ந்தகாலத்தும் நீங்காமலிருப்பது மனோதத்துவ லட்சணமாகையால் அடிநாளையபழக்கமே அப்படிப்பட்ட தேசாபிமானத்திற்குக்காரணமென்று சில மனோதத்துவ சாஸ்திரிகள் கூறுவர். அது ஒருவாறு உண்மையாயிருக்கினும் எமக்குமுற்றும்உடன்பாடாகாது. ஏனெனில், ஒருவன் சிசுவாகப்பிறந்த தினத்திலேயே அந்நியதேசத்திற்கு ஏதோகாரணத்தினாற் கொண்டுபோகப் படுகிறானென்று வைத்துக்கொள்வோம். அவன் முப்பது நாற்பது வருஷகாலமாக அவ்விடத்திலிருந்துவிட்டுப் பிறகு தான்பிறந்த ஊரொன்று பிறரால் கூறப்பட்ட தன்ஜனனதேசத்திற்கு வருகிறானென்று வைத்துக்கொள்வோம். அப்போது அத்தேசத்தை அவன் நூதனமாகக் கண்டவனேயன்றி அதற்குமுன்னே ஒருபோதும் அதைக்கண்ட ஞாபகமே அவனுக்கிராமலிருந்தும் அவனுக்கும் ஒருவித அபிமானமும் குதூகலமும் அதனிடத்துண்டாகிறதல்லவா? இதற்கு அந்த மனோதத்துவசாஸ்திரிகள் என்ன சமாதானம் கூறுவார்கள்? அடிநாளைய பழக்கந்தான் காரணமென்று சொல்வது அக்குழந்தையின் விஷயத்திற் பொருத்தமாயில்லையே? மற்றென்னை? நமக்கேனும் நமக்குமிகவும் பிரீதியாயுள்ளவர்களுக்கேனும் எவ்விதத்திலாகிலும் சம்பந்தப்பட்டதாயிருக்கிறது ஒருபொருள் என்று எப்போது நாம் அறிந்தோமோ அந்தக்ஷணமே அந்தப் பொருளினிடத்து ஒருவிதபிரீதியுண்டாவது மானுட இயல்பு. இவ்வகையான மனுஷ்ய சுபாவத்தையே தேசாபிமானத்திற்கு மூலகாரணமென்று சொல்லவேண்டுமென்பது நம்முடைய அபிப்பிராயம்.

இவ்வகையான தேசாபிமானம் நம் ஒவ்வொருவருக்கும் இயற்கையில் உண்டாயிருப்பதை ஈஸ்வரகடாட்சமென்றே சொல்லவேண்டும். ஏனெனில், ஒவ்வொருவனும் தன்னுடைய சுயப்பிரயோசனம் ஒன்றையே கருதாமல் தன்னாலியன்றவரையில் தன்னுடைய தேசத்தின்க்ஷேமத்திற்கேற்ற காரியங்களைச் செய்வதற்கு இவ்வபிமானம் பெருங்காரணமாயிருக்கின்றது. இவ்வாறு தேசாபிமானத்தி



னாலே தம்முடைய உயிரையும் ஒருபொருளென மதியாமல் பாடுபட்டவருடைய சரித்திரம் பலவாயிருக்கினும் பின்னே இரண்டொரு நல்லதிருஷ்டாந்தங்களை எடுத்துக்காட்டுகிறோம்:—

இங்கிலாந்துதேசத்தை அரசாண்டுவந்த மூன்றாவது எட்வர்ட் என்னும் வேந்தன் ப்ரான்ஸ் தேசத்தாரோடு போர்புரிந்து அவர்களுடைய முக்கியமான பட்டணங்களுக்குள்ளே ஒன்றாகிய கேலேய் என்னும் நகரத்தை முற்றிக்கைபோட்டுக்கொண்டான். அந்நகரத்திய ஜனங்கள் தேசாபிமான மிகுதியினாலே அந்நகரத்தை எளிதில் எட்வர்ட் என்னும் மன்னனுக்கு இரையாகக் கொடாமல் பிடித்தபிடியாயிருந்தார்கள். இவ்வாறு ஒருவருஷத்திற்குமேல் காலமாய்விட்டது. எட்வர்ட் என்னும் அரசனுடைய சைன்னியங்கள் பெரும்பான்மை மடிந்துவிட்டன. அந்நகரத்தார் இவ்வாறு பிடிவாதமாயிருக்கையில் அவர்களுக்கு ஆகாரவகைகளை உள்ளேவரவொட்டாதபடி எட்வர்ட் என்னும் வேந்தன்காருண்யமில்லாமல் அங்கங்கு தடையேற்படுத்தியிருந்தானாகையால் அப்பட்டினத்திற்குள் அகப்பட்டுக் கொண்டவர்களெல்லாம் ஆகாரமில்லாமையினாலே பசிக்காற்றாதவர்களாகி இறுதியிலே அப்பட்டினத்தை எட்வர்ட் என்னும் அரசனுக்கு ஒப்பித்து விடுவதாகச் சமாதானம் பேசத்தொடங்கினார்கள். அப்போது அந்நகரத்தார் யாவரும் தத்தம் உடல்பொருளாவியாகிய மூன்றினையும் தனக்குஒரு மிக்கத் தத்தஞ்செய்துவிட வேண்டுமென்றும்; தான் அவர்களை எப்படிச்செய்தாலும் செய்யலாமென்றும், இவ்வேற்பாட்டுக் குடன்படுவதாயிருந்தால்தான் சமாதானத்திற்கு ஒப்புக்கொள்ளலாமென்றும் எட்வர்ட் என்னும் மன்னன் அனுவளவேனும் அவர்களிடத்தில் காருண்யமில்லாமல் மத்தியஸ்தரிடத்தில் சொல்லியனுப்பினான். இவ்வாறு சொல்லிய அரசனுடைய பச்சாத்தாபமின்மைக்காகவும், நிர்ப்பந்தமான ஏற்பாட்டுக்காகவும் அவன் சூழலிலிருந்த தளகர்த்தர்களே அவன் விஷயத்தில் அருவருப்படைந்து, அந்நகரவாசிகள் விஷயமாக ஏதோ ஒருவிதமாய்க் கருணைபாலிப்பதே உத்தமமென்று குறையிரந்துகேட்டுக் கொண்டார்கள். அதன்மேல் எட்வர்ட் என்பவன் ஒருவாறு மனதிரங்கி, அந்நகரவாசிகளுக்காக அவர்களுக்குள்ளே ஆறுபெயர் பிரதிநிதிகளாக ஏற்படவேண்டுமென்றும், அப்பிரதிநிதிகள் சிரசிலும் பாதத்திலும் ஒன்றும் அணியாமல் மொட்டையாய் வெறுங்காலோடு * கழுத்தில் தூக்குக்கயிற்றைக் கட்டிக்கொண்டும், அந்நகரமதிலாண் திறவுகோல்களையும் அதிலுள்ள கோட்டையின் திறவுகோல்களையும் எடுத்துக்கொண்டும், வந்தன பூர்வகமாகவந்து தன்னிடத்தில் சமர்ப்பிக்கவேண்டுமென்றும் கட்டளையிட்டான். இவ்வாறு வரும் ஆறுபிரதிநிதிகளையும் எட்வர்ட் என்னசெய்தாலும் செய்யலாம். அவர்களைச் சின்னபின்னமாக்கிக்கொன்றாலும் கொல்லலாம். இந்த ஏற்பாட்டுக்குக் குறி

* இவ்வாறு வருவது அந்த ஜாதியாருக்குள் மிக்க அவமானத்திற்கிடமாகும்.

த்த ஓர் சிறுகால அளவுக்குள்ளாக அந்நகரவாசிகள் உடன்பட்டு அவ்வாறேசெய்யத் தவறுவாராயின் அவர்கள் அத்தனைபெயரையும் உடனே கொன்றுவிடுவதாக அவ்வரசன் கட்டளையிட்டான்.

இக்கட்டளையை ஒருவன் கொண்டுவந்து வாசித்தமாத்திரத்தில் அந்நகரவாசிகளெல்லாம் கர்ப்பங்கலங்கி நடுநடுங்கி என்செய்வோம்! இன்னும் சிலநாள் போராடலாமென்றாலோ புறத்திலேயுள்ள எட்வர்ட் என்னும் பகைவனைப்பார்க்கினும் அகத்திலுள்ள பசியென்னும் பகைவன்-சற்றுங்காருண்யமின்றி உயிரைவாட்டுகிறானே! நமக்குள்ளே யாரைப் பிரதிநிதியாகப்போகச்சொல்வது? என்று ஒன்றுஞ் செய்யவகை யறியாமலும் பிரதிநிதிகளை ஏற்படுத்த நாவெழாமலும் அவரவரும் தத்தம் இன்னுயிரையே பொருளெனமதித்துக் கொண்டிருக்கையில், "தன்னுயிரையும் ஒருபொருளென மதியாமல் இந்நகரத்தைக் காப்பதற்காக வெளிவருந்திறன் எவனோ அவன்மறுமையில் ஈஸ்வரகடாட்சத்தையும் இவ்வுலகத்தில் நிலையானபுகழுடம்பையும் பெறுவானென்பதற்கு ஐயமில்லையாதலின் பிரஸ்தாபப் பிரதிநிதிகளுக்குள்ளே முதல்வனாய் என்னை நியமிப்பீர்களாக." என்னும் ஒரு பேரிரைச்சல் கேட்டது. அதைக்கேட்டமாத்திரத்தில் தாய்ப்பசுவின் கனைகுரல் ஓசையைக்கேட்ட கன்றைப்போல் அங்கிருந்த யாவரும் குதூகலித்து வியந்து ஆனந்தபரவசமாகி, இவ்வாறுபேசிய புருஷசிங்கம் யாவன்? என்று பார்க்கையில் இயூஸ்டஸ் டி ஸெயின்ட் பியரி என்பவரே இவ்வாறு கூறினாரென்று தெரியவந்தது. அவர் மேலேசொல்லிய இரண்டொரு வாக்கியங்களைக்கேட்டமாத்திரத்தில், இப்போது பிரதிநிதிகளாக அறுவரை அனுப்பிவிட்டு இன்னும் சிலகாலம் உயிரோடிருத்தலைக்காட்டிலும் பிரதிநிதியாகச்சென்று இப்போதே உயிர்துறத்தல் நித்தியானந்தத்திற்கும் நிலைபெற்ற புகழுக்கும் இடமென்று அந்நகரத்திற்குள்ளிருந்த ஒவ்வொருவனும் நினைக்கத்தலைப்பட்டுப் பிரதிநிதியாகப்போக வெளிவந்தான். ஆயினும் இன்னும் ஐந்துபேர் மாத்திரம் வேண்டியிருந்தபடியினால் எல்லோரும் அவ்வாறு போதற்குக் கூடாமையாயிருந்தது.

இவ்வாறு ஏற்பட்ட ஆறுபிரதிநிதிகளும் எட்வர்ட் என்னும் அரசனுடைய கட்டளைப்படியே தங்களுடைய தேசத்தின் க்ஷேமத்திற்காகக் கழுத்தில் தூக்குக்கயிறு கட்டிக்கொண்டு சிரசிலும் பாதத்திலும் ஒன்றுமில்லாமல் கரத்தில் திறவுகோலைப் பிடித்துக்கொண்டு அந்நகர் வீதியாகப் போகையில், அவர்கள் மணிமகுடம்-அங்கி-செங்கோல் முதலிய இராஜ சின்னங்களைத் தரித்துக்கொண்டு ஜெயமடைந்த ஆறு அரசர்கள் ஏககாலத்தில் போனால் எவ்வளவு பெருமகிழ்ச்சியோடு போவார்களோ அவ்வளவு பேரானந்தத்துடன் நடந்துபோய் எட்வர்ட் என்னும் வேந்தனுக்கு முன்னே வணக்கமாய் நின்றார்கள். அப்போது அவ்வரசன் அவர்களுடைய பிடிவாதத்திற்காக அவர்களை மனம்



நோக வாயாரவைது, அவர்களை அப்படியே கொண்டுபோய்த் தூக்குப்போட்டுவிடும்படி உத்தரவு செய்தான். அப்போது அவ்வரசனுக்குக் கண்ணுங் கவசமுமாயிருந்த சில ஆங்கிலேய பிரபுக்களும் அவனுடைய மூத்த குமாரனும் அவர்களுக்காகப் பலவாறாய்க் குறையிரந்து கேட்டும் அரசன் மனதிரங்கவில்லை.

இப்படியிருக்கையில் இந்த விஷயத்தைக் கேள்வியுற்ற மஹாராணியே அந்தப் பிரதிநிதிகளுக்காகப் பரிந்து தன் கூடாரத்தினின்றும் வெளிவந்து தன் கணவனாகிய எட்வர்ட் என்பவனுக்கு முன்னே முழங்காற்படியிட்டுக்கொண்டு, "என் பிராணநாயகனே! சர்வேஸ்வரனுக்காகவும் என்னிடத்தில் நீ பாராட்டும் அன்புக்காகவும் இப்பிரதிநிதிகளுக்கு உயிர்ப்பிச்சை தருவாயாக." என்று குறையிரந்தாள். இதை மறுக்க ஆற்றாதவனாகி அரசன் அப்பிரதிநிதிகளைத் தன் மனைவி கையில் ஒப்பித்து, நீ உன் இஷ்டப்படி இவர்களைச் செய்யலாமென்று சொல்லி யனுப்பி, அந்நகரத்தாரைக் காப்பாற்றினான். உடனே மஹாராணி அவர்கள் கழுத்திலிருந்த கயிற்றை அறுத்தெறிந்து அவர்களுக்கு நல்ல உடுப்புகள் தந்து தக்க மரியாதையுடன் சுவேச்சையாகப் போகும்படி அவர்களை அனுப்பிவிட்டாள். இவளல்லவோ உத்தமி!

கேலேய் என்னும் மேற்படி நகரத்தின் பூர்வீகசரித்திரத்தினால் தேசாபிமானம் இப்படிப்பட்டதென்று தெளிவாய் விளங்குகின்றதல்லவா? நம்முடைய தேசத்திலும் தேசாபிமானிகள் பலர் இருந்தார்களென்று சரித்திரங்களினால் தெரியவருகிறது. முற்காலத்தில் ஒருநாள் காவிரியின் வெள்ளமானது திருவலஞ்சுழி என்னும் தலத்துக்குச் சமீபத்தில் வரும்போது சுழித்துக்கொண்டு பூமியில் போய்விட அதைக்கண்ட சோழராஜன்-இவ்வளவு ஜலமும் வீண்போயிற்றே! இது அனேகவயல்களுக்கும் தடாகங்களுக்கும் உதவியாகுமேயென்று துயரமுற்று ஏரண்டமாமுனிவர் என்பவரைவணங்கி, இந்தச்செய்தியைச் சொல்லவே, அவர் அந்தச்சுழியிலே ஒரு முடித்தலையையாவது சடைத்தலையையாவது இப்போது கொடுத்தால் பிரவாகம் உள்ளிறங்காமற் பெருகுமென்று கூறினார். அதைக்கேட்ட சோழன் உயிரென்ன தித்திப்பா? காயமென்னகற்கண்டா? ஆறிலும் சாவு, நூறிலும் சாவு, எந்நாளிருப்பினும் இறப்பது நிச்சயம், இன்னுமோரூழிகாலமிருப்பினுமிறப்பதல்லாற் பின்னையிங்காவதுண்டோ? எப்படியாவது நம்முடைய தேசம் செழித்திருந்தாற்போதுமென்று துணிந்து முனிவர் சொற்படி அச்சுழியில் விழுந்துவிட்டார். உடனே அப்பிரவாகம் மேலெழுந்து சோழ நாட்டின் க்ஷாமத்தைப் போக்கி அந்நாட்டினருக்கு உபகரித்தது.

தேசாபிமானம் நல்லதேயாயினும் தலைக்கேறிய விடத்தில் சில துர்க்குணங்கள் தோன்றுவது இயற்கையே. நம்முடைய தேசத்திலுள்ள சில துர்வழக்கங்களும் நமக்கு அபிமான மேலீட்டினால் நல்லவை

களாகவே தோன்றும். ஏனைய தேசத்தாருடைய நடையுடை பாவனைகளுக்கு ஒத்திட்டுப் பார்க்குமளவில் நம்தேசத்து வழக்கங்கள் சரியானவைகளல்லவென்று தோன்றிய மாத்திரத்தில் நடுவுநிலைமையுடன் அவற்றைச் சீர்படுத்திக்கொள்ளவேண்டிய முயற்சிகள் செய்யவேண்டும். இதுதான் உண்மையான தேசாபிமானமாகும். அப்படிக்கின்றி நம்தேசத்துக் குறைவுகளையும் அபிமானத்தினாலே மதிமயங்கிச் சரியென்று சொல்லிக்கொண்டு திரிவது எவ்வளவும் தேசாபிமானமாகாது.

தேசாபிமான மேலீட்டினாலே இன்னுமொரு துர்க்குணம் நம்மிடத்துண்டாவதும் இயற்கையே. அஃதென்னவெனில், நம்முடைய தேசம் க்ஷேமப்படுவதற்காக ஏனைய தேசங்களை அலக்கழித்து அங்குள்ளாரின் க்ஷேமத்தைக் குறைப்பதற்கானவற்றைச் செய்வதேயாம். எப்படி நம்முடைய சொந்ததேசத்திலுள்ளார் யாவரும் க்ஷேமமாயிருந்தால் "நாடெங்கும்வாழக் கேடொன்றுமில்லை." என்றபடி நாம் ஒவ்வொருவரும் க்ஷேமமடையலாமோ, அப்படியே உலகத்திலுள்ள எல்லாத்தேசங்களும் க்ஷேமமாயிருந்தால்தான் நம்முடைய தேசமும் க்ஷேமப்படும். இந்தாகசியத்தைக் கேவலம் சுயப்பிரயோசனத்தையே நாடும் சில தேசத்தார் முற்றும் மறந்திருக்கிறார்கள். தனக்கு ஒரு சுகத்தைத் தேடுகிறவன் எவனோ அவன் மற்றவர்களுடைய சுகத்தை முன்னே நாடினால்தான் தன்னுடைய சுயப்பிரயோசனம் சித்தியாகும். இது சுகத்தைப்பற்றிய தோர் பரமாகசியம். மனிதர்களுடைய செய்கைகளை ஈஸ்வரன் இத்தியாதி தந்திரங்களினால் நடத்திக்கொண்டுவருகிறார். உதாரணமாக ஒரு விஷயத்தை எடுத்துக் காட்டுகிறோம்.

நம்முடைய வீட்டில் வாந்திபேதி-விஷசுரம்-வைசூரி முதலிய தொத்துவியாதிகள் வராமல் நாம் நம்வரையில் சுகஜீவிகளாயிருக்கவேண்டுமென்று எண்ணங்கொள்வோமாகில் சுற்றுப்பக்கங்களிலுள்ள வீடுகள் யாவும் சுசியாகவும் சுகாதாரத்திற்கேற்றனவாகவும் இருக்கின்றனவா என்று நாம் முன்னேபார்க்கவேண்டும். அவ்வாறின்றி சுற்றும் மற்றவர்களுடைய வீடுகள் யாவும் சுகாதார ஹீனமாயிருக்குமாயின் நாம் நம்முடைய வீட்டை எவ்வளவு சுசியாக அமைத்துக்கொண்டு வைத்திருந்தபோதினும் அது தொத்துவியாதிகளுக்கொரு தடையாக மாட்டாது. சுயப்பிரயோசனத்தையே நாடுகிற ஒவ்வொருவரும் இதுபோன்ற நியாயங்களைச் சித்த சமாதானத்துடன் யோசித்துப் பார்ப்பாராக.

இது போலவே ஏனைய தேசங்களெல்லாம் செழித்திருக்குமாயின் நம்முடைய தேசத்திற்கு ஒன்றும் குறைவுவாராது. நம்முடைய தேசத்தில் அரிசி முதலிய பண்டங்கள் சிலகாலங்களிலே விலையேறுவதற்குக் காரணம் யாது? ஏனைய தேசங்கள் க்ஷாமத்தினாலே வருந்துகிறபடியாலே அவ்விடங்களுக்கு இங்கிருந்து வரம்பின்றிப் பண்டங்கள் ஏற்றுமதிசெய்யப்படுவதனால் இங்குள்ளார்க்கு அசௌக்கியம் நேரி



கின்றது. இதுபோன்ற நியாயங்களினாலே தேசாபிமானத்தினால் தம்முடைய சுயதேசத்தின் க்ஷேமத்தை நாடுவோர் ஏனைய தேசத்தின் க்ஷேமத்திற்கு ஹானி தேடாதிருப்பாராக.

இது விஷயமாகப் பூர்வசரித்திரம் ஒன்றைச்சுருக்கி எழுதுகிறோம்:—பூர்வத்தில் கிரீஸ்தேசத்து அதேன்ஸ் என்னும் மாகாணத்தார்களாற்பில் தலைவராயிருந்த தெமிஸ்டாக்ளிஸ் என்பவன் யுத்தத்தில் மஹாவீரன்; ஆனால் நடுவுநிலைமையற்றவன். தன்னுடைய தேசத்தின் அபிமானத்தினால் கண்குருடாகி அடுத்ததேசமாகிய லாஸிடீமன் என்னும் மாகாணத்தை நாசஞ்செய்யத்தலைப்பட்டான். லாஸிடீமன் மாகாணத்தாருடைய போர்க்கப்பலொன்று விசேஷயுத்த தளவாடத்துடனும் போர்வீரர்களுடனும் அடுத்த ஒருதுறைமுகத்தில் இறங்கியிருந்தபோது தெமிஸ்டாக்ளிஸ் என்பவன் தன் மாகாணத்தார்களைப்பார்த்து, இந்த லாஸிடீமன் மாகாணத்தாரோடு நமக்குச் சதா போராட்டமாயிருக்கிறது, இவர்கள் நமக்குக்கொடிய வேர்ப்புழுவாயிருக்கிறார்கள், இவர்களை இப்போது அடியோடே நாசஞ்செய்வதற்கு ஒரு உபாயம் சொல்லுகிறேன், ஆனால் அதை ரகசியமாகக் கூறவேண்டியதாயிருக்கிறபடியால் நீங்கள் உங்களுக்குள் ஒருவனைப் பிரதிநிதியாக நியமித்து உங்களுக்காக என்னிடத்தில் அந்தரங்கமாய் சைனிக்கும்படி அனுப்புவீர்களாகில் நான் அந்த உபாயத்தைச் சொல்லுகிறேனென்றான், அவர்கள் அப்படியே அரிஸ்டைடிஸ் என்பவனை அனுப்பினார்கள். அவனிடத்தில் தெமிஸ்டாக்ளிஸ் என்பவன் அடுத்த துறைமுகத்திலுள்ள லாஸிடீமன் மாகாணத்தாருடைய போர்க்கப்பலை இரகசியமாய் இரவில் போய்க்கொளுத்திவிடுவோமாகில் அவர்களுடைய உத்தமவீரர்களும் உயர்ந்ததளவாடங்களும் மடியவே நம்மைப்பிடித்தசனியொழியும், பிறகு நமக்கொருவரும் நிகராகார், நாம் தனியரசுபுரியலாமென்றான். அவன் சொல்லிய ஏற்பாடு நியாயத்திற்கும் நடுவுநிலைமைக்கும் யுத்தசாஸ்திரவிதிக்கும் விரோதமாதலால் அதற்கு அதேன்ஸ் மாகாணத்தார் எவ்வளவும் உடன்படவில்லை.

இச்சிறு சரித்திரத்தைப்பற்றி எழுதிக்கொண்டுவருகிற கிரந்தகர்த்தரொருவர் அடியில்வருமாறு கூறுகிறார். "ஆ! ஆ! யான் என்னென்று புகழுவேன்! தெமிஸ்டாக்ளிஸ் என்பவன் சொல்லியவஞ்சனையானவற்றினுடைய யுக்தாயுக்தத்தை அறிய அப்போது அந்த அதேன்ஸ்மாகாணத்தாருக்குள் தத்துவசாஸ்திரிகள் யாரேனும் இருந்தார்களா? சாதாரண ஜனங்கள் நல்லோர் அவர்கள்! அவர்களுக்கிருந்த நடுவுநிலைமையை யான் என்னென்று சொல்லுவேன்! தெமிஸ்டாக்ளிஸ் பிரேரேபித்த விஷயம் தமது தேசத்தாருக்கு ஒருதனி உயர்வும் விரயமாகாதபடி எளிதிலேசமாதானம் பெருமையையும் ஜயத்தையும் கொடுக்கத்தக்கதல்லவா? அவ்வளவிருந்தும் அந்த ஏற்பாடு அநீதியானதென்று யாவரும் உடனே உணர்ந்து அதைஅங்கீகரிக்கமாட்டோமென்றுசொ

ன்னார்களே! தம்முடையதேசம் ஒருகாலத்திலே சத்தியம் தவறியது என்னும் வசைச்சொல் சூரியசந்திரர்கள் இருக்கும்பரியந்தம் உலகத்திலிருக்குமென் றெண்ணிய ஏதேன்ஸ் மாகாணத்தாரே சத்தியகீர்த்திகள்."

ஆகையால் நம்முடைய தேசாபிமானத்தினாலே சத்தியத்தையும் நீதியையும் நடுவுநிலைமையையும் அறவே கைவிட்டு அந்நியதேசத்திற்கு ஹானிதேடுவது மானுஷீகதர்மமன்று. தேசாபிமானம் மனிதருக்கு இயல்பானகுணமா யிருக்கிறபடியால் தம்முடைய தேசத்தார்க்குப் பொய்-கொலை-களவு-கள்-காமம் என்னும் பஞ்சமஹாபாதகங்களினாலே பெருந்தீமை செய்துகொண்டுவந்தவர்கள்கூடத் தம்மைத் தேசாபிமானிகளல்லரென்று யாரேனும் தூஷித்தால் அதை அவர்கள் சகிக்கமாட்டார்கள். இதற்கு ஒரு உதாரணம் அடியில் காட்டுகிறோம்:—

கொலை களவு முதலிய பாதகங்களை அடிக்கடிசெய்துகொண்டுவந்த இரண்டு பழையகுற்றவாளிகளுக்குச் சிலவருடங்களுக்கு முன்னே கல்கத்தாவில் நியாயாதிபதி ஒருவர் ஆயுள்பரியந்தம் தீபாந்தரசிட்சை விதித்தார். அவ்வாறு சிட்சைவிதிக்கப்பட்டவர்கள் அண்டமன் என்னும்தீவுக்குக் கொண்டுபோய்விடப்பட்டனர். அவ்விடத்திலே அவர்கள் ஒருநாள்கரும்பு பயிர்செய்துவிட்டு இளைப்பினால் ஒரு மரநிழலில் உட்கார்ந்துகொண்டிருந்தார்கள். ஈஸ்வரபக்தியையும் சன்மார்க்க விஷயங்களையும் போதிப்பதற்காக அவ்விடத்திற்குச்சென்ற ஐரோப்பியபாதிரியார் ஒருவர் அக்கைதிகளைப்பார்த்து, "ஐயோ உங்களுக்குக் கொஞ்சமேனும் தேசாபிமானம் இல்லையா? உங்கள் தேசத்தார்க்கு நீங்கள்கொலை களவு முதலிய பாதகங்களினாலே பலவகையான தீமைகளை ஏன் செய்தீர்கள்?" என்று இரக்கத்துடன் கேட்டார். அதற்கு அவர்கள் அந்த ஐரோப்பியகனவானை நிர்ப்பயமாய்ப்பார்த்து, ஐயா! எங்களைப் போல் உண்மையான தேசாபிமானிகள் உலகத்தில்யாரிருக்கின்றனர்? எங்கள் தேசம்க்ஷேமம் அடைவதற்காகத் தானே அதைவிட்டுநாங்கள் இங்குவந்து இவ்வளவு சங்கடப்பட்டுக்கொண்டிருக்கின்றோ மென்றார்கள். அதுகேட்ட அந்த ஐரோப்பிய கனவான் திடுக்கிட்டுப் புன்னகையோடு அவர்களைப்பார்த்து, அன்பர்களே! தேசத்திலிருந்துகொண்டே அதற்குத் தீமையைத் தேடுவதைவிட அதைவிட்டுவந்து அதற்கு க்ஷேமத்தை உண்டாக்குவதும் ஒருவித தேசாபிமானந்தானென்று மறுமொழி கூறிப்போய் விட்டார்.

ஆகையால், தேசத்திற்கு நேர்விரோதமான காரியஞ்செய்துகொண்டுவருகின்ற கொடியதுஷ்டர்களும் தாங்கள் தேசாபிமானிகளல்லரென்று ஒப்புக்கொள்ளாமலிருக்கத் தேசாபிமானத்தை உள்ளபடி யோம்பாதவர் யாவர் ?



## விந்தையானவரிகள்.

அரசன் தன்னாலாவது, தன்பரிஜனங்களாலாவது, பகைவர்களாலாவது, கள்வர்களாலாவது, தீயவிலங்கு முதலிய பிராணிகளாலாவது தன்குடிகளுக்கு எவ்வித தீமையும்வாராதபடி அரசாட்சிசெய்யக் கடமைப்பட்டவனாயிருக்கின்றான். அவ்வாறு அவன் அரசாண்டுவருவதற்குப் பல ஏவலாட்களைவைத்து ஆதரிக்கவேண்டியது அவசியம். அந்த ஆட்களுக்குப் பிடிக்கும் சம்பளமுதலியவற்றிற்காகவும், மற்றும் தன்குடிஜனங்களுக்கு வேண்டிய சுகாதாரங்கட்கேற்ற பற்பல காரியங்கட்காகவும் பொருள் முக்கியமான கருவியாயிருக்கின்றது. அந்தப் பொருளை அரசன் தன் குடிஜனங்களிடத்திலிருந்து வரிகள் ரூபமாகப் பெறவேண்டியவனாயிருக்கிறான். ஆகையால் குடிகளுடைய க்ஷேமத்திற்காக அவர்களிடத்திலிருந்து மிதமான அளவுக்கு வரிகள் ரூபமாகப் பொருள்வருவாய் ஏற்படுத்திக்கொள்வது தருமமேயாகும். பூர்வத்தில் நம்முடைய தேசத்திலும் குடிகள் தம்முடைய ஆர்ஜிதத்திலிருந்து அரசனுக்கு ஆறிலொருகடமை கொடுத்து வந்ததாகத் தெரியவருகிறது.

"கற்றைவைகளைந்துதூற்றிக்கூப்பியூர்க்காணிதெய்வ
மற்றவர்க்கற்றவாதீந்தளவைகண்டாறிலொன்று
கொற்றவர்கடமைகொள்ளப்பண்டியிற்கொடுபோய்த்தென்னு
டுற்றவர்சுற்றந்தெய்வம்விருந்தினர்க்கூட்டியுண்பார்."

பயிரிடுங்குடிகள் வைக்கோலினின்றும் நெற்களைக்களைந்து தூற்றிப் பொதிகளாகக்குவித்து ஊர்க்காணியாட்சித்தேவதைகளுக்கும் தரித்திரர்களுக்கும் அறுதியாக ஏற்பட்டுள்ள முறைப்படிகொடுத்து, அதன் பின்பு நிற்கும் தானியங்களை அளந்துகணக்கிட்டு அதில் ஆறிலொருபங்கை அரசர்கள் தமக்குரிய இறைப்பொருளாகக் கொண்டுபோக, மற்றதை வீட்டுக்குப் பண்டியிலேற்றிக்கொண்டுபோய்ப்பிதிரர், சுற்றத்தார், தெய்வம், விருந்தினர் ஆகிய இவர்களுக்குக் கொடுக்கவேண்டியவற்றைக்கொடுத்துத் தாங்களும் புசிப்பார்களென்று இச்செய்யுளில் கூறப்பட்டிருக்கின்றது. குடிகளுடைய வீடுமுதலிய சகல சொத்துக்களும் ஒருவிதத்தில் அரசனுடைய பொருள்களேயாயினும் அக்குடிகள் மெய்வருந்தித் தேடும்பொருள்களை அமிதமாய்க்கொள்வது அநீதியென்று தொன்றுதொட்டு நாகரீகமான எல்லாச் சாதியாரும் அபிப்பிராயங்கொண்டு வருகிறார்கள். ஆகையால் குடிகளுடைய சௌக்கியம், சவரக்ஷணை இவற்றைச் சாக்கிட்டுக்கொண்டு ஆறிலொருகடமைக்கு மேற்பட அவர்களிடத்திலிருந்து இறைவாங்குவது முற்றும் அதர்மமென்று சாஸ்திரம் கூறுகின்றது.

"குடிகொன்றிறைகொள்ளுங்கோமகற்குக்கற்ற
மடிகொன்றுபால்கொளலுமாண்பே—குடியோம்பிக்
கொள்ளுமாகொள்வோர்க்குக்காண்டுமேமாநிதியம்
வெள்ளத்தின்மேலும்பல."

குடிகளை மிகவும் இம்சித்து வரிவாங்கும் அரசர்களுக்குப் பசுவின்பாலைச் சிறிதளவாகக் கறந்துண்பதனாற் பயனில்லையென்றும், அதன் மடிமுழுவதையும் ஒருங்கேயறுத்துக்கொண்டால் பால் முழுவதையும் பெறலாமென்றுங் கொள்ளும் அபிப்பிராயமும் தகுதியாகத்தோற்றும்; குடிகளை வரிமுதலியவற்றால் இம்சிக்காது மிதமான அளவுக்கு வரிவாங்கி அவர்களைக் காப்பாற்றிவரும் அரசர்க்குச்செல்வம் மிகுதியாகப்பெருகும்; என்று மேலோர் கூறியபிரமாணத்தை நாம் உலக சரித்திரத்தில் அநுபவவாயிலாகக் காணலாம்.

நம்முடையதேசத்திலே பூர்வம் சேர சோழ பாண்டியர் அரசாண்டுவந்தகாலத்திலே சத்தியத்துக்கும் நீதிக்கும் தெய்வத்துக்குமஞ்சி அரசர்கள் குடிகளிடத்து ஆறிலொருகடமைக்கு மேற்படவாங்காமல் அவர்களை ஓம்பிவந்தார்கள். பிற்காலத்திலே சில குறு மன்னர்களும் அந்நியதேசத்துத் துருக்கர்களும் நம்முன்னோர்களைப் பலவாறாக இம்சித்துவந்ததாய்த் தெரியவருகிறது. ஒருதுருக்க அரசன் நம்முடைய தேசத்தின் ஒருபகுதியை அரசாண்டுவருகையில் தன்னுடைய குடிகள் சாகுபடிசெய்யும் மாசூலில் நூற்றுக்கு ஐம்பதுவிகிதம் இறையாகத்தனக்குச் செலுத்திவரவேண்டுமென்று இராஜநிபந்தனை ஏற்படுத்தியிருந்தான். அதற்கிணங்கவே குடிகள் தம்முடைய கஷ்டார்ச்சிதத்தில் அரைப்பகுதிகொடுத்துத் துக்கப்பட்டுக்கொண்டு வந்தனர். இவ்வாறிருக்கையில் அவ்வரசனுக்கு மரணாந்தகாலம் சமீபித்தபோது, அவனுக்குப் பிறகு அவனுடைய பட்டத்தை வகிக்கவிருந்த அவனுடையகுமாரன் தகப்பனுடைய மனோபாவத்தைக் கேட்கப்போயிருந்த சமயத்தில் பிதா தன் குமாரனைநோக்கி, மைந்தனே! இத்தேசத்துக் குடிகளை நான் இம்சித்துவந்ததாகவும், அவர்கள் என்னைக் கொடிய அரசனென்றுசொல்லி வந்ததாகவும் நான் கேள்விப்படுகிறேன், நான் இறந்தபிறகாவது அவர்கள் என்னை நல்லவனென்று சொல்லும்படி நீநடந்துகொள்வாயாக வென்றுசொல்லி உயிர்துறந்தான். அது கேட்டகுமாரன்பிதாவாக்கியபரிபாலனஞ்செய்யும்பொருட்டுத், தன்குடிகள் சாகுபடிசெய்யும் மாசூலில் நூற்றுக்கு எழுபத்தைந்து விகிதம் தனக்கு இறையாகச்செலுத்தி வரவேண்டுமென்று இராஜநிபந்தனை ஏற்படுத்திவிட்டான். அதுகேட்டகுடிகளெல்லாம், இவன் பிதாவைப் போன்ற நீதிமானும் இனி அரசனாகப் போகின்றானா? எங்களுடைய விளைவில் அரைப்பங்கோடு அவன் திருப்தியடைந்திருந்தானே, இந்தப் புண்ணியவான் முக்காற்பங்கு கேட்கின்றானே யென்று முன்னிருந்த அரசனைப்புகழ்ந்தும் பின்வந்த அரசனை இகழ்ந்தும் வந்தனர். இப்படிப்பட்ட அரசர்களெல்லாம் கொடுங்கோலர்களேயாம். அதுநிற்க.

சிலதேசங்களிலே மஹாவிந்தையான வரிகளெல்லாம் குடிகளுக்கு விதிக்கப்பட்டு வந்தனவாக நாம் கேள்விப்படுகின்றோம். ஈஸ்வரகடாட்சத்தினாலே நீதியையும் சத்தியத்தையும் நடுவுநிலைமையையும் க



டைப்பிடித்தொழுகும் ஆங்கிலேயர்கள் இப்போது நமக்கு அரசர்களாக இருக்கின்றார்களல்லவா? பூர்வத்தில் இவர்களுடைய ஊரார் என்னென்னவிதமான விந்தையான வரிகளை அப்போதிருந்த அரசர்களுக்குச் செலுத்திவரவேண்டியதாய் நேரிட்டதோ அதைப்பற்றிச் சிறிது யோசிப்போம். பிரட்டன் தேசத்தின் தட்சணபாகத்தை உரோமர்கள் ஜயித்துக் கைப்பற்றிக்கொண்டபோது ஜூலியஸ் ஸீஸர் என்னும் சக்கரவர்த்தி - வருஷந்தோறும் பிரட்டன் தேசத்தார் சில வீரர்களையும் காட்டுமிருகங்களையும் தமக்கு இறையாக அனுப்புதல் வேண்டுமென்று கட்டளை பிறப்பித்திருந்தார். அவ்வாறு பிரட்டன் தேசத்திலிருந்து சென்ற வீரர்கள் அத்தேசத்தாருக்குப் பிரதிநிதிகளாக உரோமாபுரியில் பிணையாளிகளாய்க் காலங்கழித்து வந்தார்கள். அவர்கள் தம்மோடு கூடவந்த பிராணிகளைப்போலவே உரோமர்களால் நடத்தப்பட்டு வந்தனர். சில சமயங்களில் அவ்வீரர்கள் காட்டுத் துஷ்ட மிருகங்களோடு சண்டைசெய்து மரிக்கவேண்டியவர்களாயிருந்தார்கள். அவ்வீரர்களும் காட்டுமிருகங்களும் சண்டைசெய்யும்போது உரோமர்கள் சிறிதும் பச்சாத்தாபமின்றி வேடிக்கையார்த்தமாய்ப் பார்த்துக்கொண்டிருப்பார்கள். உரோமர்களுக்கு அத்துஷ்ட மிருகங்கள் மடிந்தாலும் அவ்வீரர்கள்மடிந்தாலும் ஒன்றே.

இவ்வாறு இம்சிக்கப்பட்டுவந்த ஆதி பிரட்டன் தேசத்தார் நாளாவர்த்தியில் சுவயேச்சை அடைந்த பின்னர் உவேல்ஸ் என்னும் அயலூரை ஜயித்துக் கைப்பற்றிக்கொண்டகாலத்து அப்போதையஆங்கிலேய அரசராயிருந்த எட்கார் என்பவர் வருஷத்தில் முந்நூறு ஓநாய்த்தலைகள் இறையாக உவேல்ஸ் தேசத்தார் அனுப்பிவரவேண்டுமென்று கட்டளையிட்டார். இந்த ஏற்பாட்டினால் வனங்களிலிருந்துகொண்டு ஜனங்களை இம்சித்துவந்த துஷ்ட ஓநாய்க் கூட்டங்கள் நாலைந்துவருஷத்தில் அடியோடே மாண்டன.

சிறிதுகாலம் சென்றபின் பிரட்டன் தேசத்தைச் சில கடற்கொள்ளைக்காரர்கள் கூட்டங் கூட்டமாய் அடிக்கடிவந்து எதிர்க்கத் தலைப்பட்டபோது கடலோரமாயிருந்த நாடுகள் அக்கொள்ளைக்காரர்கள் தம்மை இம்சிக்காதபடி அவர்களுக்கு வேண்டியவரையில் பொருள் கொடுத்து அனுப்பவேண்டுமென்று ஒரு கட்டளைபிறந்தது. அக்கொள்ளைக்காரருடைய ஆசை அளவற்றதாயிருந்தபடியினால் இக்கட்டளையினாலே மேன்மேலும் கொள்ளைக்காரர்கள் இடைவிடாமல் வந்து குடிகளை இம்சிக்கத்தலைப்பட்டார்கள். அதன்மேல் இங்கிலாந்து தேசத்திலுள்ள எல்லாப் பாகத்தவர்களும் பெருந்தொகைவரியாகக் கொடுத்து யுத்தக்கப்பல்களைச் சித்தஞ்செய்து கரையோரங்களில் வைக்கவேண்டியவர்களானார்கள்.

பதினொன்றாம் நூற்றாண்டில் இங்கிலாந்து தேசத்திலே மற்றும் சில விந்தையானவரிகள் விதிக்கப்பட்டன. பதினைந்துவயதுக்கு மே

ற்பட்ட ஒவ்வொரு குடியும் ஆண், பெண், தரித்திரன், தனவான் என்னும் வித்தியாசமில்லாமல் வருஷத்தில் ஒருஷிலிங் கொடுக்க வேண்டியதாய் நேரிட்டது. அவரவர்களுடைய அந்தஸ்துக்கும் வரும்படிக்கும் ஏற்றபடி வரிவிதிப்பது முறையேயல்லாமல் இவ்வாறு சமுதாயத்தில் யாவரும் ஒருமிக்க ஒரே அளவுக்கு வரிகொடுக்கவேண்டுமென்று நிபந்தனை ஏற்படுத்துவது தர்மமேயன்று. அக்காலத்திருந்த ஆங்கிலேய அரசருடைய பேரவா இம்மட்டில் நின்றதில்லை. அவர்கள் ஊரூராய் யாத்திரை செய்வதானால் தம்முடைய பரிஜனங்களுக்கும் வாகனாதிகளுக்கும் வேண்டிய போஜனாதிகளை வழியிலுள்ள ஜனங்களே கொடுக்கவேண்டும். இம்மட்டோ? வர்த்தகர்களும் உழைப்பாளிகளும் எவ்வித பிரதிபலனும் இல்லாமலே அக்காலத்தில் அரசர்களுக்கும் அவர்களைச் சேர்ந்தவர்களுக்கும் மற்றுமுள்ள பிரபுக்களுக்கும் உழைக்கவேண்டியவர்களானார்கள். இப்போதிருக்கும் உவின்ஸர் காஸில் என்னும்அநேகசிறந்த மாளிகைகளெல்லாம் அப்போதைய பிரபுக்களுக்காகவும் அரசர்களுக்காகவும் ஏழைகள் எவ்வித பிரதிபலனுமில்லாமலே கட்டி முடித்தவைகளாம். அநியாயம்!

1695-ம் வருடமுதல் பதின்மூன்றுவருஷகாலம் வரையிலே இங்கிலாந்தில் மற்றொரு விசித்திரமானவரி விதிக்கப்பட்டுவந்தது. கேவலம் பிச்சைக்காரர்களாயிருப்பவர்கள் தவிர மற்றவர்களெல்லாம் தமக்குப்பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்காகவும் இரண்டு ஷிலிங்கொடுக்க வேண்டியதாய் நேரிட்டது. பிரபுக்களாயுள்ளவர்கள் நூதனமாய்ப் பிறக்கும் தம் குழந்தைகளுக்காகப் பதின்மூன்று பவுன் ரூபாய்கொடுக்க வேண்டியவரானார்கள். இவ்வாறு பிள்ளைப்பேற்றுக்காகவும் ஒருகாலத்தில் வரிகொடுக்கப்பட்டதென்னும் விஷயத்தை நாகரீகம் அபிவிருத்தியடைந்த இக்காலத்தில் நினைக்கவும் நகைப்புக்கிடமாயிருக்கிறது.

பிள்ளைவரிவாங்கி வந்தகாலத்திலேயே பிரமச்சாரிவரியென்று ஒரு வரி விதிக்கப்பட்டுவந்தது. பிள்ளைபிறந்தால் வரிசெலுத்தவேண்டியது வருமேயென்று பயந்துகொண்டிருந்த ஏழைப்பிரமசாரிகள் என் தப்பிப்பிழைக்க வேண்டுமென்று இவ்வரிவிதிக்கப்பட்டது போலும்! இருபத்தைந்து வயதானவுடனே ஒவ்வொருவனும் மனைவியைத் தேடிக்கொள்ளுகிறவரையில் வரிகொடுத்து வரவேண்டியதாகவும் நேரிட்டது. இவ்வரி இம்மட்டில் நிற்கவில்லை. மனைவியை இழந்து பிள்ளையற்றவனாயுள்ள ஒவ்வொருவனும் இவ்வரியைக் கொடுக்கவேண்டியதாய் நேரிட்டது. சம்சாரத்தொல்லையில்லாமல் தனியே இருப்பதனால் அடையும் சுகத்துக்காக அரசனுக்கு வரி கொடுக்கவேண்டுமென்கிற சித்தாந்தம் அப்போது நியாயமாகத் தோன்றியதுபோலும்! எலிஜபெத் என்னும்இராணியார் அரசாண்டுவந்தகாலத்திலே ஆதிவாரங்களில் தேவாலயத்திற்குப் போகாதவர்கள் ஒவ்வொருவரும் யாராயிருந்தாலும் ஒருவருஷத்திற்கு ஒருஷிலிங் வரிசெலுத்தவேண்டியதாய் நேரிட்டது.



சிறிதுகாலம் சென்றபின் இன்னும் வேடிக்கையான மற்றொருவரி வாங்கப்பட்டது. ஒவ்வொருவருடைய சுகாதாரத்திற்காகவும்காற்றும் வெளிச்சமும்இன்றியமையாத பொருள்களாயிருக்கிறபடியால் இவைகள் ஒவ்வொருவீட்டிற்கும் புகுதற்குநுழைவாயிலாயுள்ள கண்ணாடிச்சாளரம் ஒவ்வொன்றுக்கும் வரிவிதிக்கப்பட்டது. எவனொருவன் அதிக சௌக்கியம் வேண்டியதற்காகத் தன்வீட்டில் அதிகமாய்ச் சாளரம் அமைத்துக்கொண்டானோ அவன் அவற்றிற்கேற்றபடியே அதிக வரி செலுத்தவேண்டியவனானான்.

மூன்றாவது ஜார்ஜ் என்பவர் இங்கிலாந்துதேசத்தை அரசாண்டு வந்தபோது இராஜ்ஜியத்திற்கு அதிகமாய்க்கடன்மேலிட்டபடியால் அதைத் தீர்ப்பதற்காக ஏககாலத்தில் அநேகவிதமான வரிகள் விதிக்கப்பட்டன. அப்போது பிரேதங்களும் வரிசெலுத்தவேண்டியதாய் நேரிட்டது. ஒருவன் பிறந்ததுமுதல் தன்வாழ்நாளெல்லாம் வரிசெலுத்தி உயிர் துறந்தபொழுதும் அவனை வரிவிட்டதில்லை. துக்கசாகரத்தில் மூழ்கிய பந்துவர்க்கங்கள் பிரேதத்துக்காக வரிசெலுத்தவேண்டியவர்களானபோது அவர்களுக்கு அரசனிடத்திலிருந்த அருவருப்பு இவ்வளவவ்வளவல்ல.

இவ்வாறு விதிக்கப்பட்ட விந்தையான ஒவ்வொருவரியும் மற்ற வரிகளோடு சேர்த்துவிதிக்கப்பட்டே வந்தபடியால் ஒருகுடியானவன் ஐயோபாவம்! எத்தனைவரியென்று தான் அரசனுக்குச்செலுத்துவான்? இப்போது சத்தியத்தையும் நடுவுநிலைமையையும் கவசமாகப் பூண்டொழுகும் ஆங்கிலேயர்கள் முற்காலத்திலே இத்தனை விதமான விந்தையாகிய வரிகளையெல்லாம் செலுத்தி வந்தார்களல்லவா?

## அவரவருரிமை அவரவரடைவர்.

உலகத்தில் கல்வி-ஒழுக்கம்-ஈஸ்வரபக்தி-நுட்பபுத்தி ஆகிய இவைகளையுடையார் வறுமையடைந்து சிறிதுகாலம் அல்லற்பட்டுக்கொண்டிருக்க மேற்சொன்னவைகளமையப்பெறாத சிலர் வளப்பமிருந்து சிறிதுகாலம் சுகமடைந்துவருவதை நாம் கண்கூடாகப் பார்க்கின்றோம். ஆயினும் அவரவருரிமையை அவரவர்க்குக் கொடுத்தளிக்கும் நடுவு நிலைமையுள்ள உலோகநாயகர்இறுதியில்முன்னேசொல்லப்பட்டவர்க்கு இன்பத்தையும் பின்னே கூறப்பட்டவர்க்குத் துன்பத்தையும் தருவாரென்பதற்கு எவ்வளவும் ஐயமில்லை. இவ்வுலகத்தில் சிறிதுகாலம் அவரவர்கள் அடைந்துவரும் இன்பதுன்பங்களைக் கொண்டே அவரவர்களுக்கு இறுதியில் உரிமைப்பொருளாயுள்ள சுகதுக்கங்கள் இன்னின்னவென்பதைச்சிற்றறிவுடையவர்களாகிய நம்மால் நிச்சயிக்கவொண்ணாது. இணையிலாஞான பூரணராகிய

பகவான் அவரவர்களுடைய யோக்கியதாம்சங்களுக்கேற்க அவரவர்களுக்கு நன்மைதீமைகளைத் தந்தளிப்பார். இவ்விஷயத்தைப் பின்வரும் விருத்தாந்தம் மெய்ப்பிக்கும்:—

பிருந்தாநகரமென்னும் பட்டினத்தில் முன்னொருகாலத்திலே மனுநீதி தவறாமல் குடிகளை அரசாண்டுவந்த சந்திரசேகரனென்னும் அரசனொருவனிருந்தான். கற்பில் அருந்ததியையொத்த அமிர்தவல்லி என்னும் மனைவியோடு அவன் இல்லறதருமத்தை நடத்திக்கொண்டுவருகையில் நெடுங்காலம் புத்திரப் பேறில்லாமையால் அவ்விருவரும் நெஞ்சம்புண்ணாகி,

“ படைப்புப்பலபடைத்துப்பலரோடுண்ணு
முடைப்பெருஞ்செல்வராயினுமிடைப்படக்
குறுகுறுநடந்துசிறுகைநீட்டி
யிட்டுந்தொட்டுங்கௌவியுந்துழந்து
நெய்யுடையடிசின்மெய்படவிதிர்த்து
மயக்குறுமக்களையில்லோர்
பயக்குறவிலர்தாம்வாழுநாளே.”

என்றிரங்கி, அக்குறைவைநீக்கிக் கொள்ளும்பொருட்டுப் பலவகையான தானதருமங்கள்செய்தும் கடவுள் அவர்களுக்குப் புத்திரபாக்கியம் அநுக்கிரகிக்காமலிருந்தார். இவ்வாறிருக்க ஒருநாள் வழக்கப்படி சந்திரசேகரன் வயோதிகராயுள்ள அநேகரை வருவித்துத் தக்க உபசாரம்செய்து அவர்களுக்கு அறுசுவையோடுகூடிய ஐவகையுண்டியையும் படைத்து மரியாதைசெய்த பின்னர் அவர்களுக்குள் மிகவும் தபோதனராயிருந்த ஒருவரை மாத்திரம் சிறிதுகாலம் தன் அரண்மனையிலிருக்கவேண்டுமென்று குறையிரந்துகேட்டுக்கொண்டு மற்றவர்களைத் தத்தம் இருப்பிடத்திற் கனுப்பிவிட்டான். பின்பு ஒருநாள் சந்திரசேகரன் அந்த ரிஷிபுங்கவரைநோக்கி, சுவாமீ! யான் புத்திரபாக்கியம் பெறுவது எக்காலம்? ஒருவன் இல்லறதருமத்தை நடாத்துவதெல்லாம் சற்புத்திரனைப் பெறுவதற்காகவே யன்றோ? யான் பிள்ளைப்பேறற்ற கொடும்பாவியென்று எனக்குத் தெரியுமானால் இந்தராஜ்ஜியத்தைத் துறந்து யான்என்மனைவியுடன் வனத்திற்சென்று வானப்பிரஸ்தனாய்த் தவஞ்செய்து நாள்கழிப்பதாக நிச்சயித்திருக்கின்றேனாகையால் தேவரீர் ஞானதிருஷ்டியைக்கொண்டுபார்த்து என்ராஜ்ஜியத்தைவகிக்கப் புத்திரன் பிறப்பானோ? சொல்லவேண்டுமென்று குறையிரந்தான்.

அதுகேட்டு அம்முனிபுங்கவர் சிறிதுநேரம் தியானத்திலிருந்து கண்ணைவிழித்துப்பார்த்து அரசனைநோக்கி, அன்பனே! உனக்கு இரண்டு புத்திரர்கள் பிறக்கப்போகிறார்கள், ஆனால் அப்புதல்வர்கள்நீ இராஜசம்பத்தில் இருக்குங்காலத்திலேபிறக்கமாட்டார்கள், இன்னும் சிலவருஷங்கள்சென்றபின்வேற்றரசனொருவன்படையெடுத்துவந்து உன் இராஜ்ஜியத்தைக் கைப்பற்றிக்கொண்டு உன்னைத்துரத்திவிடுவான், அப்போது நீயும் உன்மனைவியும் இந்நகர்நீங்கித் தரித்திரதிசையிலிருக்கும்போது அவ்விரண்டுபுத்திரர்கள் பிறந்து உன்னைவிட்டுச் சிலகாலம் அவர்கள் பிரிந்திருந்து பிறகு அஷ்டட ஐஸ்வரிய சம்பன்னர்களாகியிருக்கையிலே நீயும் உன்மனைவியும் அவர்களாலாதரிக்கப்பட்டுச் சுகமாய்வாழ்வீர்கள், இதுதான் இனிஉன் விஷயமாகநடக்கப்போகும் விருத்தாந்தமென்றுசொல்லி முடித்தார். அதுகேட்டு அரசன் எப்படியாவது தனக்கு இரண்டுபுத்திரர்கள் பிறக்கப்போகிறார்களென்னும் பெருமகிழ்ச்சியினாலே, தனக்கு இனிவரப்போகும் துன்பங்களைப்பற்றிச் சிறிதும் கவலையற்றவனாய்க் களிப்படைந்திருந்தான். சிலநாள்சென்றபின் அம்முனிச் சிரேஷ்டர் சந்திரசேகரனையும் அவன் பத்தினியாகிய அமிர்தவல்லியையும் வாழ்த்திவிடைபெற்றுச் சென்றார்.

இவ்வாறிருக்கையில் நாலைந்துவருடங் கழிந்தபின் வேற்றாரரசனொருவன் இரத கஜ துரக பதாதிகளுடன் படையெடுத்துப் பிருந்தாநகரத்தையடைந்து சந்திரசேகரனோடு போர்புரிந்தபோதுசந்திரசேகரன் தோல்வியடைந்தான். அவனுடைய மந்திரிகள் முதலியபிரதான உத்தியோகஸ்தர்களெல்லாம் போரில்மடிந்தார்கள். அதுகண்டு சந்திரசேகரன் உயிர்தப்பிப் பிழைக்கும்பொருட்டுத் தன்மனைவியாகிய அமிர்தவல்லியை அழைத்துக்கொண்டு இரவில் மாறுவேடம்பூண்டு பிருந்தாநகரத்தைவிட்டு நெடுந்தூரம் யாத்திரைசெய்து ஓர் அயலூருக்குச்சென்று அங்கு ஒருவணிகன் வீட்டில்போய்ச்சேர்ந்தான். அவ்வணிகனிடத்து மாறுவேடம்பூண்டு சந்திரசேகரன்ஒருவேலையாளாகவும் அமிர்தவல்லி ஒருதாதியாகவும் அமர்ந்தார்கள். அவ்வணிகனும் அவன்வீட்டாரும் இவர்களுடைய அருமையையும்பெருமையையும் சிறிதும் அறியாதவர்களாகி நாள்முழுவதும் வேலைசெய்யச்சொல்லி அரைவயிறு கஞ்சிவார்த்துவந்தார்கள். இவ்வாறு நாள்கழித்துக்கொண்டுவருகையில் அமிர்தவல்லி கர்ப்பங்கொண்டாள். அதுகண்டு சந்திரசேகரன் தனக்குப்பிள்ளை பிறக்கப்போகிறதென்னும் மகிழ்ச்சியினால் தன் துன்பத்தையெல்லாம் முற்றும்மறந்தானாயினும் சிலவேளைகளில் அவன் தெய்வத்தை நினைந்து, பகவானே! யான்செய்த தானதர்மங்களெல்லாம் இப்படியாகவாமுடிந்தன? நல்ல சம்பத்தானதிசையில் நானிருந்தபோது எனக்குப் புத்திரன் பிறவாமல் இந்த தரித்திரதிசையில் நீ புத்திரனைக்கடாட்சித்தது யாதுநினைந்தோ என்று துக்கப்படுவான். அடுத்தகாட்டில் ஓரிடத்திலே ஒருசிறுகுடிசையை அமைத்து அவ்விடத்தில் அமிர்தவல்லியைக் கொண்டுபோய் விட்டு அவள் பிரசவிக்குங்காலத்தில் மருத்துவம்பார்க்கும்படிவேறே எவர்களுக்கும் பொருள்கொடுக்க வகையில்லாமையினால் தானே அவ்வேலையைச்செய்து முடிக்கவேண்டியவனாயினான். பிறந்த பிள்ளைக்குக் கஜபதியென்னும் பெயரிடப்பட்டது. பத்துநாள் சென்றபின் சந்திரசேகரன் தன்மனைவியையும் குழந்தையையும் இட்டு

க்கொண்டு வழக்கப்படி தன்எஜமானன் வீட்டுக்குச்சென்று வேலைசெய்ய ஆரம்பித்தான். பலஹீனத்தினாலே அமிர்தவல்லி வேலைசெய்யக்கூடாமையாயிருப்பதைக் கண்ட சந்திரசேகரன்கண்ணீருங்கம்பலையுமா யிருந்தபோது அவன் எஜமானனாகிய வர்த்தகன் அவனை நோக்கி,நீ ஏன் வியசனப்படுகிறாயென்று கேட்டான்.என்மனைவியின் பலஹீனத்தைப்பற்றியும், என்னருமைப்புதல்வனைப் போஷிப்பதற்காகவேண்டியபொருள் இல்லாமையைப்பற்றியும் யான் துக்கிக்கின்றேனென்றுசந்திரசேகரன் கூற, அதற்கு அவ்வர்த்தகன் மனமுருகி, இன்று முதல் உன்மனைவி இங்குவந்துவேலைசெய்ய வேண்டுவதில்லை,யான் உன்னுடைய விசுவாசமான வேலைக்காக மாதச்சம்பளம் போதுமானவரையில் தருகின்றேனென்று சொன்னான்.அதுகேட்டுச் சந்திரசேகரன் சிறிது மனமகிழ்ச்சியடைந்து ஒருவீட்டில் தன்மனைவியையும் குழந்தையையும்இருக்கச்செய்து தான் செட்டியாரிடத்தில் ஊழியம்பண்ணி உபாயஜீவனம் செய்துவந்தான்.

இவ்வாறு இரண்டுமூன்று வருஷங்கடந்தபின் அமிர்தவல்லி மற்றொருபுதல்வனை யீன்றாள். அவனுக்கு விசித்திரவிஜயன் என்னும்பெயரிடப்பட்டது, இவ்விரண்டு புதல்வர்களும் புத்தியறியத்தக்க வயது அடைந்தபோது தம்பெற்றோரைப்பார்த்து, நாங்களினிதேசசஞ்சாரஞ்செய்து திரவியம் சம்பாதித்துக்கொண்டு வந்து நாங்கள் சுகிப்பதுடன் உங்களையுங்காப்பது எங்களுடைய பெருங்கடமையாயிருக்கிறதென்று சொல்ல அமிர்தவல்லி பிரிவாற்றாமையால் அவர்களைப்பார்த்துக்கிலேசப்பட,

" கருப்பைக்குண்முட்டைக்குங்கல்லினுட்டேரைக்கும்
விருப்புற்றமுதளிக்குமெய்ய-னுருப்பெற்றா
லூட்டிவளர்க்கானோவோகெடுவாயன்னாய்கேள்
வாட்டமுனக்கேன்மகிழ்."

என்னும் பழம்பாடலை அவட்கு நினைப்பூட்டித் தந்தையினிடத்துச் செலவு பெற்று ஒருநாளுணவு கட்டமுதாக எடுத்துக்கொண்டு "தெய்வமேதுணை." என்று சொல்லிப்போனார்கள்.இவ்வாறுசென்ற இரண்டுகுமாரர்களும் நெடுந்தூரம் யாத்திரைசெய்து ஒரு காட்டுவழியாகப்போய்க் கொண்டிருந்தார்கள். அக்காட்டின் ஒருபுறத்திலே விந்தையான ஒருமாவிருக்ஷமிருந்தது. அது நூறுவருஷத்திற்கொருதடவை ஒரே ஒருபழம் கொடுப்பதுவழக்கம். அப்பழத்தைப் புசிப்பதற்காக ஒரு சந்நியாசி நெடுங்காலமாகக் காத்திருந்தான். அன்றுதான் அப்பழங்கனிந்து கீழேவீழ்ந்தபடியால் அதை அச்சந்நியாசி எடுத்துக் கொண்டு, இந்த நிர்மானுஷ்யமான காட்டிலே ஒருவரும் இதை அபகரிக்க மாட்டார்களென்று நினைத்து அதை அம்மரத்தடியிலேயே வைத்துவிட்டுச் சிறிதுதூரத்திலிருந்த ஒருதடாகத்தில் பூஜைபுனஸ்காரங்களை முடித்துவந்து சாப்பிடலாமென்



று போனான். கஜபதி, விசித்திரவிஜயன் ஆகிய இவ்விரண்டுகுமாரர்களும் அம்மரத்தின் பக்கமாகப்போய்க் கொண்டிருந்தபோது விசித்திரவிஜயன் அக்கனியைப் புசிக்கலாமென்றெடுத்துத் தன்தலைமேலிருந்த கட்டமுது மூட்டைக்குள் தமையனுக்குந் தெரியாமல் ஒளித்துவைத்துக்கொண்டான். ஸ்நானஞ்செய்து அதியாவலுடன் ஓடிவந்த அந்தச் சந்நியாசி அக்கனி அவ்விடத்திலிராமையைக்கண்டு பிரமித்துத் திகிலடைந்து, புழுதியிற்படிந்திருந்த காலடிக்குறிகளைப் பார்த்துக்கொண்டே ஓடிவந்து அவ்விருவரையுங் கண்டு, ஓபிள்ளைகளே ! நான் சில போகபாக்கியங்களைவிரும்பி நூறுவருஷகாலமாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த இவ்விருக்ஷத்தின் கனியை நீங்கள் கண்டீர்களா ? அக்கனியைத்தருவீர்களாகில் உமக்குவேண்டிய உணவாதிகளை விசேஷமாக நான் தருகிறேனென்று மிகவும் கெஞ்சிக்கேட்டான். அதுகேட்ட விசித்திரவிஜயன் உலகப்பற்றையெல்லாம் ஒழித்ததாக மேலே சந்நியாசிவேஷம் பூண்டிருக்கும் இவன் போகபாக்கியங்களை விரும்புவானேன் ? இவனுடைய தவத்திற்கு அநுகூலமாயிருந்து இவனுக்கு ஈஸ்வரன் திருவடிச்செல்வத்தை இக்கனி தரத்தக்கதாயிருக்குமாயின் இதை இப்போதே இவனுக்குக்கொடுத்துவிடுவேன், அவ்வாறன்றி இவன் கொண்டகோலம் ஒன்று, இவன் எண்ணிய எண்ணம் மற்றொன்று என்றுநினைத்து,ஐயா ! அக்கனியை நாங்களறியோமென்று சாதித்தான். மூத்தவன் எதார்த்தத்தில் அறியேனென்று தம்பியின்மொழியை வற்புறுத்தினான். அவர்களுடைய விசித்திரமான சாதனையைக்கேட்டு அச்சந்நியாசி மெய்யென்று நம்பி,ஐயோ! கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லையே என்று தன்தலையை மோதிக்கொண்டு புரண்டுபுரண்டு அழுதான். அதுகண்ட விசித்திரவிஜயன் - ஐயா ! அது என்னவிதமான உலக இன்பத்தைத் தரத்தக்கது சொல்லுமென்று பரிதாபங்கொண்டவனைப்போல் நடித்துக்கேட்டான். அதற்கு அச்சந்நியாசி, ஐயோ ! அக்கனியின்மேல்தோலைத் தின்போனுக்குச் சிறந்த இராஜ்ஜியபட்டாபிஷேகம் உண்டாகும், அதன் கொட்டையைத்தின்பவன் நகைக்கும்போதெல்லாம் தன்பல்லினின்றும் இரத்தினங்களைக் கக்குவான், இது தான் அத்தெய்வீக விருக்ஷக்கனியின் மகத்துவம், என்று சொல்லிக்கொண்டேபோய்விட்டான்.

இவ்வாறு அச்சந்நியாசி போய்விடவே கஜபதியும் விசித்திரவிஜயனும் சிறிதுதூரம் யாத்திரைசெய்து ஒரு கால்வாயண்டைவந்து சேர்ந்தார்கள். அப்போது விசித்திரவிஜயன் கட்டமுதை யவிழ்த்து வேண்டியவரையில் தன்தமையனாகிய கஜபதிக்குக் கொடுத்தான். அவன் அதைச் சாப்பிட்டுக்கொண்டிருக்கையில் அவனுக்குந் தெரியாமல் தான் ஒருபுறத்தில் வைத்துக்கொண்டிருந்த அத்தெய்வீக விருக்ஷத்தின் கனியை அறுத்து விசித்திரவிஜயன் தன் தமையனுக்குக்கொடுக்க அதை அவன் பார்த்தமாத்திரத்தில் வியப்புடன் தம்

பி! சந்நியாசி ஓடிவந்து சிறிது நேரத்திற்குமுன்னே அவாவுடன்கேட்ட கனிதானோ இது? அப்படியாயின் ஐயையோ! அவன்சொத்துநமக்குவேண்டாமென்றுசொல்ல, அதற்குவிசித்திரவிஜயன் தமையனை நோக்கி, அண்ணா! அக்கனி அவன்தேடியதல்ல, அது அத்தெய்வீக விருக்ஷத்திற்குரியது, அது நூறுவருஷத்திற் கொருதடவை தானே கனிந்து, பூர்வ நல்வினையின் பயனால் இகத்தில் போகபாக்கியங்களை அநுபவிக்க இருப்போர்க்குத் தெய்வகடாக்ஷத்தினால் கிடைக்கத்தக்கதேயல்லது ஒருவன் அம்மரத்தடியில் நூறுவருஷம் வரையில் காத்திருப்பதனால் மாத்திரம் கிடைக்கத்தக்கதல்லவென்று எனக்குச் சில சாதுக்கள் சொல்லக்கேள்வி, அன்றியும் இவன் உலகப்பற்றையறவேவிட்டுச் சந்நியாசிவேடம்பூண்டு மோட்ச இன்பத்தை யடைவதற்காகத் தவஞ்செய்பவனாயிருக்க, பழையவாசனையினால் இவன் மீண்டும் போகபாக்கியங்களை விரும்புகிறான்,

" நல்லனசெய்யத்தொடங்கினுநோனுமே
யல்லனவல்லவற்றிற்கொண்டுய்க்கு—மெல்லில்
வியனெறிச்செல்வாரையாறலைத்துண்பார்
செலவுபிழைத்துய்ப்பபோல்."

நல்லகாரியங்களைச் சிலர் செய்யத்தொடங்கியகாலத்தும் அக்காரியம் முடிவேறாதவகைக்குத் தீவினை தீயவழிகளிற்கொண்டுபோய் விடுக்கும்; எப்படியெனில், பகற்காலத்திலே ராஜபாட்டையாகப் போய்க்கொண்டிருக்கிற வழிப்போக்கர்களை வழிபறித்துண்ணுங்கள்வர்வேறொரு தப்பான மார்க்கத்தைக்காட்டி அவ்வழியே அவர்களைச்செலுத்தி அவர்களுடைய பொருளைக் கைப்பற்றுவதுபோலாகும் என்னும் பிரமாணப்படியே, அந்த மின்பத்தழிவிலாவீட்டையடைவதற்காகத் தவநெறிபூண்ட அச்சந்நியாசியை உலகமாயைமயக்காநிற்கின்றது; ஆதலின் அவனுக்கு நான்செய்தது நன்மையே, நாமோ உலகத்தில் போகபாக்கியங்களைச் சம்பாதிக்கிறதற்காகவே நம் பெற்றோரைவிட்டுக் கங்கணங்கட்டிக்கொண்டு இவ்வளவு தூரம்வந்தோம், ஆகையால் யான்செய்த காரியம் ஆட்சேபனைக் கிடமில்லையென்று சமாதானங்கூறினான். இதைக்கேட்ட கஜபதி தன் சகோதரனுடைய புத்திசாமர்த்தியத்தை வியந்து அத்தெய்வீக விருக்ஷக் கனியின்மேல்தோலைப் பிரீதியோடும்கட்டமுதுடன்கலந்துண்டான். பிறகுமிகுதியாயிருந்த கட்டமுதையும் அக்கனியின் மிகச்சிறியகொட்டையையும் விசித்திரவிஜயன் உட்கொண்டான். பிறகு அவ்விருவரும் ஒருசெடி நிழலிற்படுத்து இளைப்பாறிக்கொண்டிருந்தார்கள்.

நெடுந்தூரத்திலுள்ள வீரகண்டாமணி என்னும் ஓர்நகரத்திலே அரசாண்டுகொண்டிருந்த மன்னனொருவன் நெடுங்காலமாய்ச் சந்ததியில்லாதவனாயிருந்து மரணதிசையில் தன்பிரதானமந்திரி முதலானோரையழைத்து, நான்இறந்தமாத்திரத்தில்என் பட்டத்துயானையின்கையில் ஒருகும்பத்தையும் மாலையையுங்கொடுத்து நகர்வெளியே அனுப்பிவிடுங்கள், அது தனிச்சையாகத்திரிந்து யாரை அக்கும்பத்தின் ஜலத்தால் அபிஷேகம்செய்து மாலைசூட்டிக்கொண்டுவருகிறதோ அவன் எவனாயிருக்கினும் அவனையே நீங்கள் அரசனாகவைத்துக்கொண்டு சுகமாய்வாழக்கடவீரென்று கட்டளையிட்டுத் தேகவியோகமானான். அவனுடைய இஷ்டப்படியே மந்திரிகள் முதலானோர் பட்டத்து யானையை அலங்கரித்தனுப்ப, அதுநெடுநாளாக ஊரூராய்த்திரிந்துவந்து திடீரென்று மரத்துநிழலில் படுத்துக்கொண்டிருந்த கஜபதிக்கு நீராட்டி மாலைசூட்டி அவனைமுதுகின்மேல் தூக்கிவைத்துக்கொண்டு ஓடிப்போய்விட்டது. அதைக்கண்ட விசித்திரவிஜயன் கர்ப்பங்கலங்கி நடுநடுங்கித் தன் தமையனுக்குப் பட்டாபிஷேகமாகப்போகிறதென்னும் சந்தோஷசெய்தியைமுற்றும் அறியாதவனாகி, ஐயோ! ஐயோ! தெய்வமே! ஒரு கொடிய யானை என் தமையனைத் தூக்கிக் கொண்டுபோய் விட்டதே யென்று இனம் பிரிந்த அன்றில் போல் தனியே கதறிக்கொண்டிருந்தான்.

(இன்னும்வரும்.)



## ஓர் கரடியின் கதை.

### 19-ம். அத்தியாயம்.

(தொடர்ச்சி.)

விக்கிரமவீரன் பசியினால் வருந்துவது.

இவ்வாறு அக்குரங்குசெய்துகொண்டிருந்த சேஷ்டைகளைச் சிறிதுநேரம் வரையில் பார்த்த விக்கிரமவீரன் களிப்படைந்தது. விக்கிரமவீரன் கட்டுண்டிருந்த கயிறுபோதுமானவரையில் நீளமாயிருந்திருக்குமாயின் அக்குரங்குக்குச் சமீபமாகப்போய் விளையாடிக்கொண்டிருந்திருக்கும். கம்பீரமான பிராணியாகிய யானையிருக்க அதைவிட்டு அக்குரங்கினிடத்திற்போய்ச் சிநேகஞ்செய்வது மானக்குறைவென்று அது நினைத்தது. உடனே விக்கிரமவீரன் யானையைத் திரும்பிப்பார்க்கத் தலைப்பட்டபோது அந்தயானை தன்சிறுகண்களைத்திறந்து ஆகாரத்திற்காகத்தன் துதிக்கையை முன்னும் பின்னுமாய்த்துழாவிக்கொண்டிருந்தது. தன்னைக்காட்டிலும் எத்தனையோமடங்கு அதிகபெரிதாயிருந்த அந்த யானையோடு சிநேகஞ்செய்யவேண்டுமென்று விக்கிரமவீரனுக்கு அபேட்சையிருந்தது. அக்கரடி மிகவும்பசியாயிருந்தபடியால் எஜமானர் சிறிது ஆகாரம் கொண்டுவரப்போகிறார்களாவென்று ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்ததுமன்றி, இவ்வளவு பெரியபிராணிதின்னும் ஆகாரம் எப்படியிருக்கிறதோ பார்க்கவேண்டுமென்றும் மிகவும் ஆவலாயிருந்தது.

அங்கிருந்த ஒவ்வொருவரும் அன்றையதினம் அதிகவேலையாயிருந்தபடியால் கரடியைப்பற்றிய ஞாபகம் ஒருவருக்கும் வரவேயில்லை. அது இராத்திரிவரையில் ஆகாரம் இல்லாமலேயிருந்தது. அதற்குச்சமீபத்திற் பசையற்ற சில எலும்புகளும் ஒருசட்டியில் தண்ணீரும் மாத்திரமிருந்தன. ஆனால் யாராவது வந்து அதன்வாயுறையைக் கழற்றுகிறவரையில் அவற்றைப் பார்த்துக்கொண்

டு மாத்திரம் இருக்கவேண்டுமேயன்றி அவற்றைக்கொண்டு தன்பசியைத்தணித்துக்கொள்ள முடியாது. யானையும் குரங்கும் காயும் ஆகாரமுட்கொள்ளும்போது அங்கே உட்கார்ந்துகொண்டு பசியுடனே பார்த்திருப்பது விக்கிரமவீரனுக்கு மிகவும் வயிற்றெரிச்சலுக்கிடம். ஆயினும் யானையும் குரங்கும் தின்றுகொண்டிருந்த ஆகாரம் தான் தின்னும் ஆகாரத்தைப்போன்றதேயன்றிவேறொன்றும் விசேஷமானதன்றென்று விக்கிரமவீரன் திருப்தி யடைந்திருந்தது.

அங்கிருந்த குரங்கும் யானையும் ஒருவனுக்கே உரியவையென்று பிரத்தியட்சமாய்த் தெரியவந்தது. ஏனெனில் சொந்தக்காரன் அவைகளைக்காட்டும்பொருட்டு ஜனங்களை இட்டுக்கொண்டு வந்தகாலத்தில் அவன் அக்குரங்கை அவிழ்த்து அந்தயானையின் முதுகின்மேல் ஏறிக்கொண்டு சவாரிசெய்வதுபோல் நடிக்கும்படிசெய்தான். அவ்வளவு பருத்த உருவமுடைய யானையின்மேல் அச்சிறு குரங்கு ஏறிக்கொண்டு சவாரிசெய்தது யாவர்க்கும் அதிக வேடிக்கையா யிருந்தபடியால் அவைகளை விலைக்குவாங்கவந்தவர்களேயன்றி வேறே அநேகரும் திரளாகச் சூழ்ந்துகொண்டார்கள். அங்கிருந்த ஜனங்கள் தரையில் துட்டுபோடுவார்களா? என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்த யானை அவர்கள் அவ்வாறே போட்டபோது அது தன் நீண்டதுதிக்கையினால் ஒவ்வொரு துட்டையும் பொறுக்கி யெடுத்து மேலே யிருந்த குரங்கினிடத்திற்கொடுக்க அது அவைகளைத் தன் சொக்காய் ஜேபிக்குள் போட்டுக்கொண்டது. இந்தப்படி போட்டுக்கொண்டேவந்த துட்டுகள் ஜேபிநிறையச் சேருமானால் பளுவைச் சகிக்காமல் அக்குரங்கு அவைகளை எடுத்துத் தன் எஜமானன் கையிற்கொடுக்கும். சில சமயங்களிலே தனவான்களாயிருந்த சிலர்யானைக்கு முன்பாக அரைக்கால்ரூபாய் முதலியசிறுவெள்ளி நாணயங்களைப் போட்டபோது, யானையின் கண்கள் உயரத்திலே சிறுத்திருக்கிறபடியால் இச்சிறு நாணயங்கள் அதன் கண்ணுக்குப் புலப்படமாட்டாவென்றும், அதவா அவைகளை அது ஒருவேளை பார்க்குமானாலும் அவ்வளவு சிறு நாணயங்களைத் தன் கனத்ததுதிக்கையினாலே நிலத்தினின்றும் அவைகளைப் பொறுக்க முடியாதென்றும் விக்கிரமவீரன் அபிப்பிராயப்பட்டது. அவ்வாறு ஜனங்கள் தன் எஜமானனாகிய சேடனுக்குப் போட்டுக்கொண்டிருந்த சிறு நாணயங்களைப் பொறுக்கியெடுக்க விக்கிரமவீரன் பலகால் முயன்றும் அதற்கு முடியாமற்போய்விட்டது. யானையோ மஹா விசித்திரமான பிராணியாதலால் பெரியநாணயங்களை எவ்வளவு சுலபமாகத் தன் துதிக்கையில் எடுத்ததோ அவ்வளவு சுலபமாகவே அச்சிறு நாணயங்களையும் பொறுக்கி எடுத்தது. யானைக்கு அதன் துதிக்கை எவ்வளவு உபயோகமாயிருக்கிறது! அது தன் துதிக்கையை முன்னும்பின்னுமாகத் துழாவி விக்கிரமவீரனுக்குச் சமீபமாகத் திருப்பியபோது, அத்துதிக்கை அப்பிராணியின் மற்ற அங்கங்களின் மேற்புறத்திலுள்ள தோலைப்போலவே தளமாகவும் கறுப்பாகவும் மேலுக்குமாத்திரமிருந்தபோதிலும், உட்புறத்திலே நம்முடைய வாயின் உட்புறத்திலுள்ள சிவந்த சதையைப்போன்ற செந்நிறமமைந்த உணர்ச்சிமிகுந்த ஓர்வகை ஜவ்விருக்கிறதாகவும், முனையில் தொங்கிக்கொண்டிருக்கிற ஒருசிறிய உதட்டை முன்னும் பின்னுமாக அசைத்து அப்பிராணி அதிசிறிய பதார்த்தங்களையும் பொறுக்கி எடுத்துக்கொள்ளக் கூடியதாகவு மிருக்கிறதென்று விக்கிரமவீரன் அறிந்துகொண்டது. அக்குரங்கும் யானையும் ஒன்றுக்கொன்று எவ்வளவு சிநேகமாயிருந்தன! குரங்கு மேலே ஏறிக்கொள்ள வேண்டுமென்று எண்ணங்கொள்ளுமானால் உடனே அது சுலபமாய்த் தன் கருத்தை யானைக்கு அறிவிக்கும். உடனே யானை தன் அற்புதமான துதிக்கையைக் கொண்டு அக்குரங்கைத்தன் முதுகின்மேல் தூக்கிவைத்துக்கொள்ளும்.



இப்படியிருக்கையில் கொஞ்சநேரம்பொறுத்து ஸ்தூலதேகமுடைய ஒருவன் அந்தயானையின் எஜமானனோடுகூட அவ்விடத்திற்குவந்தான். அவ்விருவரும் ஒருவரோடொருவர் மிகவும் ஆவலாய்ப் பேசிக்கொண்டிருந்தபடியால் யானையின் எஜமானன் இவன்தானென்று விக்கிரமவீரன் நிச்சயித்துக்கொண்டது. யானையும் குரங்கும் தங்களுக்குத் தெரிந்தவேடிக்கையெல்லாம் அப்போது காட்டின. பிறகு யானைக்கு ஆகாரம் கொடுத்துக் கொண்டிருந்தபோது அதன் எஜமானன் சமீபத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்தான். யானை ஆகாரம் தின்று கொண்டிருந்ததைப்பார்க்க விக்கிரமவீரனுக்கு எல்லாவற்றிலும் மிக வேடிக்கையாயிருந்தது. அச்சமயத்தில் விக்கிரமவீரன் பசியாயிருந்திராவிட்டாலும் சிறிது ஆகாரம் அதற்கு யாராவது கொடுத்திருந்தாலும் அங்கே பார்த்துக்கொண்டிருந்தவர்களைப்போல விக்கிரமவீரனும் பேரானந்த மடைந்தேயிருக்கும்.

இப்படியிருக்கையில் சொந்தக்காரன் அக்குரங்குக்கு ஆங்கிலேயர் சமையற்காரனைப்போல் வேஷம்போட்டான். அதற்கு ஒருவெள்ளைச் சொக்காயையும் விந்தையான ஒருசிறியவெள்ளைத் தட்டைக்குல்லாயையும் போட்டு உடுப்புவிலகாதபடி ஒருவித வெண்மையான அரைக்கட்டும் கட்டியிருந்தது. இந்த அரைக்கட்டுக்கு மத்தியிலே அதன்நீண்ட மெல்லியவாலை நுழைத்து அதுமேலே தூக்கிக்கொண்டிருக்கும்படி அவன் செய்துவைத்தான். இந்தஸ்திதியில் அக்குரங்கைப்பார்க்கும் ஒவ்வொருவருக்கும் பெருநகைப்புவாராமற்போகாது. சமீபத்தில் பெரியபெட்டி ஒன்றிருந்தது. அதன்மேல் ஒருசிறிய மேஜை போட்டிருந்தது. அதன்மேல் சுத்தமான வெள்ளை வஸ்திரமொன்று போட்டுமூடியிருந்தது. அப்பெட்டியின்மேல் அந்தயானை தன் முன்னங்கால் இரண்டையும் தூக்கிவைத்தது. அப்பெட்டியின்மேல் குரங்கு சுலபமாய் ஏறியிறங்குவதற்கு ஏற்றதாக ஒருசாய்ப்பான பலகைபோட்டிருந்தது. யானையின்தலையில் ஓர்சிறிய மணிகட்டியிருந்தது. அம்மேஜையின்மேல் ஆங்கிலேயர் வழக்கப்படி எல்லாம் சித்தஞ்செய்யப்பட்ட பிறகு யானை தன் தலையின்மேல் கட்டியிருந்தமணியைத் துதிக்கையைக் கொண்டடித்தது. உடனேநம்முடையவீடுகளில் சாதாரணமாயிருக்கிற வேலைக்காரர்களைப் போலல்லாமல் அக்குரங்கு அந்தச் சமயத்தில் தன் எஜமானனாகிய யானையை ஒரு நிமிஷங்கூடக் காத்துக்கொண்டிராதபடி அப்பலகையின்மேல் திபதிப வென்று ஏறுவதும் அதிவேகமாக இறங்குவதுமாயிருந்தது. ஆங்கிலேயருடைய வழக்கப்படி இப்போது வேடிக்கை காட்டப்பட்டபடியால் குரங்கு- ஒருதட்டைப்பீங்கான் நிறைய சூப்பை வார்த்துக்கொண்டு தகரத்தினாலாகிய பிரகாசமுள்ள ஒரு மூடியை மேலேவைத்து மறைத்துச் சரேலென்று பலகையின்மீதேறித் தன் எஜமானனாகிய யானைக்குமுன்னே மேஜையின்மேல் வைத்து உடனே மேல்மூடியை மாத்திரம் தூக்கிக்கொண்டு கீழே இறங்கி ஓடிப்போய் விட்டது. உடனே யானை தன்துதிக்கையினால் ஒரே மூச்சாக அந்த சூப்பையெல்லாம் உரிஞ்சித் தன்பிரமாண்டமானவாய்க்குள்ளே வார்த்துக்கொண்டபின்மணியை அடித்தது. சமையற்காரவேஷம் பூண்டு வெள்ளையுடுப்பணிந்த குரங்கு திவ்வியமான சில செந்நிறக்கிழங்குகளை அதிவேகமாய்க்கொண்டுவந்து மேஜையின்மேல் வைத்தது. மஹாகெம்பீரபுருஷனைப்போல் நடித்த யானை அவைகளைத் தின்று தட்டில் ஒன்றைமாத்திரம் மிகுதியாகவைத்து மறுபடியும் மணியை அடித்தது. அந்தப்படிதட்டில் வைக்கப்பட்ட ஒருகிழங்கு தனக்கென்பதை அறிந்து அச்சிறுகுரங்கு அவ்வொருகிழங்கோடு அப்பாத்திரத்தைத் தூக்கிக்கொண்டுபோய்த் தனக்கென்று ஏற்பட்ட ஒருமூலையில் வைத்துவிட்டு, நாற்புறமும் சதுரமாய்க் கனத்திருந்த ஒரு சிறுமாய்சத்துண்டை

த் தூக்கிக்கொண்டு முன்போலவே மேஜையின்மேல் வைத்தது. எஜமானனாகிய யானை அதையுந்தின்று ஓர்சிறியதுண்டை மிகுதியாகவைத்துப்பிறகு ரொட்டியையும் அதற்கேற்ற மசாலாவர்க்கங்களையும் தின்று முடித்தது. ஒவ்வொரு தடவையிலேயும் அந்தயானை தன் வேலைக்காரனாகிய குரங்குக்கென்று கொஞ்சம் பாத்திரசேஷம் வைப்பது வழக்கம். அதை அக்குரங்கு ஒரு மூலையிலிருந்துகொண்டு நாய்க்குக்கொஞ்சம்போட்டுத் தானும் தின்னும்.

இவைகளெல்லாம் இவ்வளவு கேளிவிலாசமாகவிருக்கவும் ஐயோ பாவம்! விக்கிரமவீரன் மாத்திரம் இன்னும் பசியோடேவருந்தி யிருந்தது. சொந்தக்காரன் வந்து யானையையும் குரங்கையும் இட்டுக்கொண்டுபோகையில் தன்னைச்சும்மா பார்த்துவிட்டுமாத்திரம்போய் விடவே விக்கிரமவீரன் தன்வெறுங்கைகளைப் பசியினாற் சிறிதுநேரம் நக்கிவிட்டு இளைப்பினால் தூங்கத்தொடங்கியது. அன்றையதினம் சந்தையிலாகவேண்டிய வேலைகளெல்லாம் முடிந்தன. சந்தையிரைச்சலும் ஆரவாரமும்தும்பும்தூசும் கொஞ்சங்கொஞ்சமாக அடங்கிவிட்டன. இருட்டு ஏற ஏற வெப்பம் சிறிது தணிந்ததேனும் விக்கிரமவீரனுக்குப் பசிமாத்திரம் அதிகப்பட்டுக் கொண்டேவந்தது.

நன்றாயிருட்டியபின் விக்கிரமவீரன் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தபோது தன் எஜமானனாகிய சேடனும் ஸ்தூலித்ததேகத்தையுடைய மற்றொருவனும் அவ்விடத்திற்குவந்து கயிற்றை அவிழ்த்துக்கொண்டு விக்கிரமவீரனைச் சந்தையினின்றும் இட்டுக்கொண்டு வெளியேபோய் விட்டார்கள். அப்போது இராத்திரி நெடுநேரமாய்விட்டது. அவ்விருவரும் இக்கரடியும் அப்பட்டினத்திலிருந்த ஒருவிசாலமான தெருவழியாகப்போய்க்கொண்டிருக்கையில் ஜனசந்தடியெல்லாம் அடங்கிவிட்டது. எங்கும் நிச்சப்தமாயிருந்தது. இந்தப்படி நெடுநேரம் நடந்துசென்றபின் அப்பட்டினத்தின் சீர்திருத்தமற்ற ஓரிடத்தில் போனபோது அங்கேவெளிச்சங்கூட நன்றாயில்லை. வீடுகளோ உயர்ந்திருந்தன. தெருக்களோ மிகநெருக்கம். அங்கே ஒரு சிறுசத்திரத்தைச் சேர்ந்த ஒருதாழ்ந்த கொட்டடிக்குள்ளே அவர்கள் பிரவேசித்துவிக்கிரமவீரனைத் தெருவண்டையாகக் காலியாயிருந்த ஒரு அறைக்குள்ளேவிட்டுச் சிறிது ஆகாரம்போட்டபின் அதற்கு முன்போலவே வாயுறையை மாட்டி,வழக்கப்படி கட்டிவைக்காமல் அன்று இரவு முழுமையும் அங்கேதனியாயிருக்கும்படியாக விட்டுவைத்தார்கள். அங்கே உள்ளேகட்டுவதற்கு எவ்வித குச்சேனும் கொக்கியேனும் இராதபடியினால் அந்த அறைக்குள்ளேயே திரிந்துகொண்டிருக்கட்டுமென்றாவது, அதற்கு இஷ்டமான மூலையிலேபடுத்துத் தூங்கட்டுமென்றாவது நினைத்து அதை அவ்வாறே விட்டுவிட்டுச் சேடனும் விக்கிரமவீரனுடைய புது எஜமானனும் ஜன்னலை நன்றாய் மூடி வெளிக்கதவையும் பந்தோபஸ்தாய்ப் பூட்டிக்கொண்டுபோய்விட்டார்கள்.

## காவிய லட்சணம்.

ஆரியராகிய நம்மவர்களுக்கு வடமொழியில் அநேக காவியங்களிருக்கின்றன. அவைகளுட் சிலவற்றைச் சிறந்த கவிவாணர் திராவிடபாஷைகளிலே மொழிபெயர்த்திருக்கின்றார்கள். இராமாயணம்-பாரதம்-ஸ்காந்தம் என்னும் இவைகள்வடமொழியினின்றும் திராவிட பாஷையில் மொழிபெயர்க்கப் பட்டவை. ஆரியராகிய நம்மவர்களுக்கு ஒவ்வொரு விஷயத்தைப்பற்றி ஒவ்வொரு கிரந்தம் விரிவாய்



அமைக்கப்பட்டிருந்தபோதினும் எல்லாவிஷயங்களும் காவியத்திலே ஏககாலத்தில் சுருக்கி ஒருகிரந்தரூபமாக அமைத்துக்கூறப்பட்டிருக்கின்றன. இவ்வகையான காவியம் பெருங்காவியமென்றும் சிறுகாவியமென்றும் இருவகைப்படும். இவற்றுள் பெருங்காவியத்தின் பொதுலட்சணம் இப்படிப்பட்டதென்பதை அடியில் வருமாறுவிளக்குவோம்:—

பெருங்காவியத்தின் பொது இலக்கணத்தைப்பற்றி முன்னோர் தமிழிற் கூறிய சூத்திரமாவது:—

“பெருங்காப்பியநிலைபேசுங்காலை, வாழ்த்துவணக்கம் வருபொருளிவற்றினொன், றேற்புடைத்தாகி முன்வரவியன்று, நாற்பொருள்பயக்கு நடைநெறித்தாகித், தன்னிகரில்லாத் தலைவனையுடைத்தாய், மலைகடனாடு வளநகர்பருவம், இருசுடர்த்தோற்ற மென்றினையனபுனைந்து, நன்மணம்புணர்தல் பொன்முடிகவித்தல், பூம்பொழினுகர்தல் புனல்விளையாடல், தேம்பிழி மதுக்களி சிறுவரைப்பெறுதல், புலவியிற்புலத்தல் கலவியிற்களித்தலென், றின்னனபுனைந்த நன்னடைத்தாகி, மந்திரந்தூது செலவிகல்வென்றி, சந்தியிற்றொடர்ந்து சருக்கமிலம்பகம், பரிச்சேதமென்னும் பான்மையின்விளங்கி, நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக், கற்றோர் புனையும்பெற்றியதாகும்.”

இச்சூத்திரத்தின் பொருள் பெரும்பான்மையோர்க்கு எளிதில் விளங்காமலிருக்கக் கூடுமென்றெண்ணி இதனையே ஆதாரமாகக்கொண்டு பெருங்காவிய லட்சணத்தைத் தெளிவாய்க் கூறுவோம்.

பிரதமத்தில்; வாழ்த்து-வணக்கம்-பரம்பொருளினுண்மைநிலை என்னும் இவற்றுள்ளே ஏதேனுமொன்றை முதல் அமைத்துக் கூறவேண்டுவது அத்தியாவசியமாகும். அறம்-பொருள்-இன்பம்-வீடென்னும் புருஷார்த்தம்நான்கையும் அந்நூல்கொடுக்கத்தக்கதாயிருக்கவேண்டும்: அந்தகாவியம் யார்விஷயமாகச் செய்யப்படுகின்றதோ அந்தபுருஷன்சாமானியனாயிராமல் தனக்கு ஒப்புயர்வில்லாச் சிறப்புடையவனாயிருக்கவேண்டும். அந்தநூலில் மலை-கடல்-நாடு-நகரம் ஆகிய இவற்றின்வளப்பத்தைப்பற்றியும், அந்தந்தக்காலபேதலட்சணங்களைப்பற்றியும், சூரிய சந்திரருடைய உதயாஸ்தமனங்களைப்பற்றியும் சந்தர்ப்பம் வருமிடங்களிலெல்லாம் விரிவாய்க்கூறியிருக்கவேண்டும். அன்றியும் அதில் மணம்புரிதல்-முடிசூட்டல்-சோலைகளில் பூக்கொய்தல்-தடாகங்களில் நீர்விளையாடல்-களியாட்டயர்தல்-மக்கட்பேறு-நாயகனும்நாயகியும் ஊடுதல்-அவ்வூடலால்விளையும்துக்கம் - பிறகு கூடுதல்-பிறகு அதனால் விளையும் இன்பம் ஆகிய இவைகளைப்பற்றி அந்நூலில் நல்ல நடையிற்கூறியிருத்தல்வேண்டும். அல்லாமலும் மந்திராலோசனை-தூது-போர்- வெற்றி ஆகிய இவைகளும் இடையிடையே தொடர்ச்சியாய் அமைத்துச் சருக்கங்களாகவேனும் இலம்பகங்களாகவேனும் பரிச்சேதங்களாகவேனும் ஏற்றபடி பாகுபாடு செய்திருக்கவேண்டும். சிங்காரம்-வீரியம்- பெருநகை - கருணை - இரௌத்திரம்-குர்ச்சை - சாந்தம் - அற்புதம் - பயம் என்னும் நவ

ரசாலங்காரங்களும் அவற்றால் முறையே விளங்கும் கருத்துக்களும் தோன்ற மேலே சொல்லப்பட்ட விஷயங்களை யமைத்துச் சிறந்த வித்வான்கள் செய்யும் பெரும் நூல்களே பெருங்காவியங்களெனப் படும்.

இவ்வாறு கூறப்படும் காவியத்தில் எந்தநாட்டையும் நகரத்தையும் பற்றிய வர்ணனை சொல்லப்படுகின்றதோ அந்தநாடும் நகரமும் காவியம் எழுதுங்காலத்திலே எவ்வளவு வளங்குன்றியிருந்தபோதிலும் காவியத்திலிருக்கவேண்டிய அங்கங்களுக்கேற்றபடி அவைகளைப் பூரணமாய்ச் சொல்லவேண்டியது கவிகளின் கடமையாதலால் அவர்களைப் பொய்யரென்று விவேகிகள் இகழார். களியாட்டயர்தல் - ஊடல்-கூடல் முதலியவற்றைச் சொல்லுகையில் முறையே அவற்றால் விளையும் நன்மை தீமைகளை உதாரணவாயிலாகக் காட்டவேண்டுமென்பதே காவியத்தின் கருத்தாகும்.

சிறுகாவியம் என்பது அறம்-பொருள்-இன்பம்-வீடு என்னும்புருஷார்த்தங்கள் [illegible]களுள் ஒன்றேனும் பலவேனும் குறைந்து, மேலே பெருங்காவியத்திற் கூறிய எல்லாவிஷயங்களும் சற்றேறக்குறையச் சுருக்கமாய் அமைந்திருப்பதேயாம். (இன்னும் வரும்.)

## விசித்திரானக் குறிப்புகள்.

குருடருக்குத் தடிகாரம்.—குருடர்வாசித்து அறிவுவிளக்கம்பெறவும் கைத்தொழில் முதலியவேலைகளிற் பயிலவும் அநேக உபாயங்கள் செய்யப்பட்டிருக்கின்றன வென்பதை முன்னே சிலசந்தர்ப்பங்களிற் கூறியிருக்கிறோமல்லவா? குருடர் [illegible]களைப்போலவே பிறருடைய உதவியில்லாமல் ஸ்பரிச உணர்ச்சியினால் மணியறிந்துகொள்வதற்காக ஸ்விஸ் ஜாதியார் ஓர்வகைக் காலஅளவைக்கருவி ஏற்படுத்தியிருக்கிறார்கள். இது தக்கதோருதவியே!

காமிலாக்காரிகை.—இலங்கையிலுள்ள கொளம்போ என்னும் பட்டினத்தில் ஒரு ஸ்திரீக்குப் பிறந்ததுமுதல் இரண்டுகைகளும் முற்றுங்கிடையா. அவள் தன்னுடைய பாதங்களைக்கொண்டு அதியற்புதமான வேலைகளெல்லாம் செய்துகொண்டுவருகிறாள். கால்களால் அதிநாணயமான கயிறு திரித்து விற்பதே அவளுடைய ஜீவனம். அவள் தேங்காய்திருகுதல், ஊசியில் சரடுகோத்தல், அன்னபானாதிகளை வாய்க்குக்கொண்டுபோதலாகிய பலவிசித்திரமான வேலைகளைக் கரங்களினாற் செய்வது போலவே அதிவிரைவாகவும் சுலபமாகவும் கால்களால்செய்கிறாள். அவளுக்குவயது முப்பத்திரண்டு. சில அங்கங்கள் குறைவாய்ப் பிறப்பவர்களுக்கு நல்ல புத்தியைக்கொடுத்து நன்றாயிருக்கும் அங்கங்களைக்கொண்டு அவர்களை ஜீவிக்கச்செய்யும் ஜகதீசருடைய கருணையே கருணை!

PRINTED AT THE ALBINION PRESS—MADRAS.